www.tamilarangam.net

Raya

தை
1991

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

# அஆஇ

AANAA AAWANNAA IENAA



இந்தத்தாய்கள் எதற்காய் எழுந்தனர்
தம் இருப்புக்கே அச்சுறுத்தல் எழுந்ததால்தானே....?

## அரசியல் ஆய்வு இலக்கிய காலாண்டு இதழ்

Tijdschrift voor Tamils in Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆக்கதாரர்கள் தமது ஆக்கங்களுடன் தமது முகவரி முழுப் பெயர் போன்ற விபரங்களையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இவ் விபரங்கள் அற்ற ஆக்கமோ ஆய்வுகளோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

ஆக்கதாரர்களே அவர்களது ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

சஞ்சிகை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். அவையே எம்மை மேலும் உயர்த்தும் படிகளாகும்.

# அஆஇ

AANAA AAWANNAA IENAA

அரசியல் ஆய்வு இலக்கிய ஏடு

தை 1991 சுவடு 4

முகவரி AANAA AAWANNAA IENAA
Postbus 8523
8905 K M LEEUWARDEN
Nederland

சந்தா விபரம்

1 வருடம் தபாற்செலவு உட்பட
நெதர்லாந்து fl 15,-
ஏனைய ஐரோப்பிய நாடுகள் fl 20,-

எமது வங்கி கணக்கு இல
12.75.43.171
Rabobank
3354 LEEUWARDEN



நாட்டுமாந்தரெல்லாம் - தம்போல் நரர்கள் என்று கருதார்
ஆட்டுமந்தையாமென் - றுலகை அரசர் எண்ணிவிட்டார்
நாட்டுமுண்மை நூல்கள் - பலதாங் காட்டினர்களேனும்
நாட்டுராஜநீதி - மனிதர் நன்கு செய்யவில்லை

- பாரதி -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எம் கருத்து



## 'முஸ்லீம்கள் வெளியேற்றம்'

இலங்கையின் வடக்கு பகுதிகளில் காலம் காலமாக வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லீம்கள் தமது குடியிருப்புப் பகுதிகளிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவதாகவும் தாமே விரும்பி வெளியேறுவதாகவும் இரட்டைச் செய்திகள் சொல்லப் படுகிறது. எது எப்படியாயினும் தாம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பகுதியில் இருந்து அவர்கள் வெளியேறிக் கொண்டிருப்பது அவர்களது எதிர்பார்ப்புகளிலும் அபிலாசைகளிலும் பாதுகாப்பிலும் நம்பிக்கை இழந்து தான் என்பதை யாராலும் மறுக்க முடியாதுள்ளது.

வடக்கில் பெரும்பாலும் சிவில் நிர்வாகத்தைக்கொண்டிருக்கும் விடுதலைப்புலிகள் முஸ்லீம்களை 'தாமே வெளியேறி' விட்டுக் கொண்டிருக்கிறார்களா? அல்லது 'கட்டாய வெளியேற்றம்' செய்கிறார்களா? அவர்களது தனித்துவத்தைப் பேணுவதையும் அவர்களது அபிலாசைகள் மதிப்பதையும் எந்த விடுதலை இயக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும், அப்படித்தான் இயக்கங்களும் கடந்த காலத்தில் நடந்து கொண்டன. ஏனைய தமிழர்கள் வெளியேறுவதை பல 'விசா' முறைகள் 'நிதி' முறைகள் மூலம் தடுத்து வைத்துக் கொண்டிருக்கும் விடுதலைப்புலிகள் முஸ்லீம்கள் வெளியேற விடுவதில் மட்டும் கட்டுப்பாடுகள் விதிக்காமல் அவர்கள் தாமாகவே வெளியேற விடுவதையிட்டு சந்தேகம் கொள்ள வைக்கிறது. அதாவது அவர்கள் 'போய்விடட்டும்' என்று கண்டும் காணாத நிலையா? அதற்காக மக்கள் மீது 'விசா'பணச்சுமைகள் ஏற்படுத்தி அவர்களின் தற்காப்பு வழிகளுக்கு முரணாகவும் உணவுத் தேவைக்கு முரணாகவும் நடந்து கொள்வதை நாம் ஏற்றுக் கொள்வதாக அர்த்தமாகாது.

மன்னார் பகுதிகளிலிருந்து முஸ்லிம்கள் நவம்பர் மாத முற்பகுதியில் வெளியேறி விட வேண்டும் என்று விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளதாக செய்திகள் உண்டு. அப்படி வெளியேறிய பலர் கொழும்பிலும், மத்திய மாகாணத்திலும் வந்து தங்கியுள்ளார்கள். இந்தச் செய்திகளின் படி முஸ்லிம்களுக்கு 'தமிழ் ஈழம்' இடம் கொடுக்காது என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

கிழக்கு மாகாணத்தில் அரசு இன அடிப்படையில் முரண்பாடுகளையும், மோதல்களையும் தூண்டியது. முஸ்லீம் ஊர்காவல்படையினருக்கும் வேறு சில அமைப்புக்களுக்கும் ஆயுதங்கள் வழங்கி, தமிழர் பலரையும், பல கிராமங்களையும் அழிப்பதற்கு காரணமாக இருந்தது. அதற்கு கிழக்கில் பல முஸ்லீம்கள் துணைபோயிருந்தார்கள் என்பதும் உண்மை. அதேவேளை விடுதலைப்புலிகளும் பல முஸ்லீம் சிவிலியன்களை கடத்தியும் சிறையிட்டும் கொலை செய்தும் உள்ளார்கள். பலர் 'துரோகிகள்' என்ற அடிப்படையில் கொல்லப்பட்டாலும், முஸ்லீம் சமூகம் முழுவதையும் அந்தத்துரோகிகளாகப் பார்ப்பதும், அவர்களைத் 'தொப்பி பிரட்டி'களாகப் பார்ப்பதும் என்பது ஒரு இனவாதப்பார்வையே ஆகும். கிழக்கிலங்கையில் முஸ்லீம் சமூகம் தமிழ்ச்சமூகத்துடன் முரண்பட்டு மோதல்களும் ஏற்பட்டதற்கு காரணம் அரசாங்கம், விடுதலைப்புலிகளும் முஸ்லீம்களிடையே வளர்ந்த ஆயுதக்குழுக்களுமாகும். அங்கு அரசோ, விடுதலைப்புலிகளோ, எந்த

www.tamilarangam.net

அபுதத்துறைக்களோ சில நிருவாகத்தையோ நடத்த முடியாத நிலையே உள்ளதாகத் தெரிகிறது. இதனால் எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபமாகவே எல்லோரும் கருதுகிறார்கள்.

வடக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் முஸ்லீம் மக்களின் அபிலாசைகளை மதித்து நடத்தியிருக்க வேண்டும். ஆனால் நடந்தது நேர்மாறாகவேயுள்ளது. முஸ்லீம் மக்களின் உரிமைகள் - அவர்களது தனித்துவங்கள் 'தமிழீழத்தில்' பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை முஸ்லீம் மக்கள் மத்தியில் மட்டுமல்ல தமிழ் மக்கள் மத்தியிலும் சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

அரசு தமிழ் முஸ்லீம் மக்களின் மீது பிரயோகித்த இனரீதியான பாகுபாடுகள், அதிகாரம், அதிகார துஸ்பிரயோகம் காரணமாகவே விடுதலை இயக்கங்களின் வளர்ச்சியும், உணர்வும் தூண்டப்பட்டது. எத்தனையோ முஸ்லீம் இளைஞர்கள் இவ் விடுதலைப் போரில் தம்மை இணைத்துக்கொண்டார்கள். இன்னுயிர் அளித்தார்கள். முஸ்லீம் மக்கள்மீதும் தமிழ்ப்பேரினவாத முனைமைகள் பாகுபாடுகள் காட்டப்படுவது நிரந்தரமான பகைமைக்கே வழிகோலும். மேலும் பகைமையும், - பிரிப்பும் தவிர்க்கப்பட்டு ஒற்றுமைக்கான வழிகளில் கவனம் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறோம். -ஆசிரியகுழு-

## அவர்கள் பார்வையில்

-சங்கரி-

எனக்கு—
முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை.

அவர்களின் பார்வையில்—
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன.

சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகள் ஆகும்.

—கற்பு பற்றியும்
மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்
கதைக்கும்
அவர்கள்
எப்போதும் எனது உடலையே
நோக்குவர்.

கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்.

நன்றி-
சொல்லாத சேதிகள்

www.tamilarangam.net

ஐரோப்பியச் சஞ்சிகைக[...]ல் சில ஒரே கருத்தும், எண்ணங்களும் கொண்டதாகவே பிரதிபலிக்கின்றன. ஒரு புதிய கலை இலக்கிய அரசியல் பரப்பை உருவாக்க எடுக்கும் முன் முயற்சியாகவே கருதுகிறேன். அதிலும் 'அஆஇ' யில் 'நோய்க் குறிப்பு'க்கள் சேர்க்கப்பட்டிருந்தது. புதிய தகவல்களை எமக்குத் தெரிவிக்கிறது. அப்படியான தகவல்களையும் தொடர்ந்து செய்யுங்கள்.

லோகா - நெதர்லாந்து.

[...] சஞ்சிகைகளில் 'அஆஇ' எனும் இச்சஞ்சிகை ஒரு வித்தியாசமான போக்கையுடையதும், ஆக்கமான ஆழ்ந்த அரசியல் கருத்துக்களை கொடுக்கிறதுமாக அமைகிறது. இக்காலகட்டத்தில் இது மக்களை விழிப்படைய வைக்கத் தவறாது. இப்படியே தொடர வாழ்த்துவது

சிவா - நெதர்லாந்து.

# உங்கள் கருத்துக்கள்

இன்றைய காலகட்டத்தில் எமது மக்களுடைய தேவைகளைப் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள் என எதிர்பார்க்கிறேன். 'அஆஇ' சார்பில் கருத்தரங்கு ஒன்றை நடாத்தி அதன் மீதான செயற்பாடு ஒன்று உருவாக்கப்படுவது நன்மைபயப்பது என எதிர்பார்க்கிறேன். இன்று எழுத்தாளர்களுக்கான குரல்கள் நலிவடைந்து போய்விட்ட நேரத்தில் உங்களது குரல்களும், கரங்களும் எமது மண்ணிற்கும் மக்களுக்கும் மிக மிக அவசியமானதென புரிந்திருப்பீர்கள்.

— அன்ரன் இலங்கை

'அஆஇ' யின் ஆசிரிய கருத்து இன்றைய காலப்பகுதியில் மிகச்சரியானதும் அரசியல் நேர்மையானதும், மேலும் தொடர் மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் மிகத்தரமானவை பல்வேறு மொழிக்கருத்தாளர்களின் எண்ணங்களை பிரதிபலிக்கிறது. தமிழுக்கு தற்போதைய நிலையில் பல்மொழி உள்வாங்கல்கள் மிக அவசியமானதே. பரந்த மனித நேயத்துடன் புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்கள், சஞ்சிகைகள் இவற்றிலும் கவனம் செலுத்துவது வரவேற்கப்பட வேண்டியதே.

சிவா - நெதர்லாந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பார்த்திபனின்** கதையையொட்டி.....

# தெரியவராததும் தெரிந்ததையும்

- ந. சுசீந்திரன் -

மேற்கு ஜெர்மனியில் வெளியாகும் பல சஞ்சிகைகளில் தனது சிறுகதைகள் மூலம் எமக்கு அறிமுகமானவர் பார்த்திபன் . "ஆண்கள் விற்பனைக்கு" என்ற அவரது நாவல் இங்கு வெளிவந்த நூல்களில் குறிப்பிடக்கூடியது. "கனவை மிதித்தவன்" என்ற தொடர் "தூண்டில்" இலும், "சித்திரா = பெண்" என்ற தொடரை "நமது குரல்" இலும் எழுதி வருகின்றார். இவை பெரும்பாலான வாசகர்களின் ஆவலையும், கவனத்தையும் தூண்டியவை.

நாம் அன்றாடம் அனுபவிக்கும் சில்லறை விடயங்கள் எழுத்துச் சாதுரியமுடையவரால் சிறுகதையாகவோ, நாவலாகவோ ஆக்கப்பட்டு வியாபாரம் பண்ணப்படுவதற்கும், அதே சில்லறைவிடயங்களுக்கூடாகவே உன்னிப்பான கவனிப்பையும், தெளிவான உண்மையையும் காட்டி, ஒரு ATTENTION (உறுதியாய் நில்) எனும் மீள்தாக்கத்தை (REACTION ) வாசகர்களிடம் ஏற்படுத்துவதற்கும் மிகப் பெரிய வித்தியாசமுண்டு. இம் மறுதாக்கம் ஒருவகையில் சிறுகதைகளின் வெற்றியுமாகும். இவற்றை "சிந்தனையைத் தூண்டித் தொடரவைக்கும் சிறுகதைகள்" என்றும் கூறலாம். (KURZ-GESCHICHTE ZUM NACHDENKEN). இவ்வாறான சிறுகதைகளை எழுதுவதில் பார்த்திபன் முன்னேறிக் கொண்டிருக்கிறார். சிந்தனையைத் தூண்டுவதற்குச் சிறுகதை எழுதப் புறப்பட்டால் இது சரிவருமா, நல்ல கதை எழுத முடியுமா என்பது சந்தேகமே. அப்படியெழுதினால் யாருக்காவது ஏதாவது படிப்பிக்கும் குணம் வந்துவிடும்!

அண்மையில் "அஆஇ" யில் (ஆனி, ஆவணி 90) வெளியாகிய "தெரியவராதது" சிறுகதையைப் படித்தேன். தொடக்கத்தில் இவர் என்ன—இங்குள்ள சம்பவங்களை மட்டுமே சொல்லிக்கொண்டு போகிறார் என்று நினைத்த எனக்கு கதையைத் தொடர்ந்து முடிவு வரை படித்தபோது ஒரு ‘தலை-அடி’ கிடைத்தது. அதே கதையை நான் மீண்டும் வாசித்து எடுக்கின்ற குறிப்புகளை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரான்சில் இருக்கும் கலாமோகனின் "வீடும்வீதியும்" என்ற நாடகம் நூலாக வெளிவந்துள்ளது. (விற்பனை உரிமை: 41-B, Sidco Industrial Estate, Ambattur, Madras-600 098) இந்நூலை அவர் இவ்வாறு இதயதானம் செய்துள்ளார்:-

> 1989ஆம் ஆண்டு பாரிசில், ஒரு ஹொட்டல் அறையில் தமிழ் இளைஞர்கள் சிலரால் விலை பேசி அழைக்கப்பட்டு வந்து அவர்களது மிருகவெறிக்கு முன் தனது உடலையும், உயிரையும் பலியாக்கிய, முகவரியும், பெயரும் தெரியாத ஆப்பிரிக்கப் பெண்ணின் நினைவின் முன் எனது படைப்பைச் சமர்ப்பிக்கின்றேன்.

இதைப் பார்த்த நேரந் தொடக்கம் 1982 இல் மேற்கு பேர்லினிலும் இவ்வாறு தமிழர்களால் கொண்டுவரப்பட்டு, பெண்ணொருத்தி இறந்துபோக, சடலத்தை அதிகாலையில் பேப்பர் போடும் வண்டிலினுள் வைத்துக்கொண்டுபோய் மிகப் பெரிய குப்பைத் தொட்டிக்குள் போட்டார்களாம் என்ற செய்தியும் சேர்ந்து இந்த முகம் தெரியா முகங்களின் நினைவுகள் அவரவர்களின் பெற்றோரை நோக்கி நகர்ந்தன. அதோடு எமது விடுதலை இயக்கங்களுக்குச் சென்று கொல்லப்பட்டவர்கள், காணாது போனவர்கள் மீண்டும் திரும்புவார்கள் என்ற நப்பாசையுடன் இருக்கும் இன்னோரன்ன தாய்மை நெஞ்சங்களின் ஏழ்மை முகங்கள் தோன்றித் தோன்றி.... இன்னும் சொல்லப் போனால்... ஒவ்வொரு இளைஞனும் சயிக்கிளில் வீடு தாண்டும்போது என் மகனை இருக்க மாட்டானா என்று படலையைப் பார்க்கும் தாயின் உருவம் ...... இவற்றைப் போலவே, "இலங்கையில் ஒரு மூலையில் உழைத்துக் களைத்துத் தளர்ந்துபோன அப்பாவும், ஔவையாராகிக் கொண்டிருக்கும் அக்காவும், துப்பாக்கிகளுக்குப் பயப்பிடும் அண்ணாவும், எதிர்காலக் கனவுகள் பற்றிய ஆரம்பங்களுடன் தம்பி, தங்கையும் பாலுவின் கடிதம், பணத்திற்காக காத்திருந்தார்கள், காத்திருப்பார்கள் என்று பார்த்திபனின் சிறுகதை முடிகின்றபோது அவனது கதைமாந்தர்கள் உயிருடன் நடமாடினார்கள் ஏதோ உரைத்தபடி. தபாற்காரனைக் காணும் போதெல்லாம் ஏங்கித் தவிக்கும் இக்கொடிய வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் குடும்பங்கள் இன்று ஒன்றிரண்டல்ல. இவர்களது மைந்தர்கள் விமான விபத்தில் சிக்காது போயிருக்கலாம். ஆனால் இவர்கள் இவ்வுலகில் இல்லை.

1983க்குப் பின்னர் ஐரோப்பிய, அமெரிக்க வட்டாரங்களில் நடந்த விமான விபத்துகளில் இலங்கைத் தமிழ் அகதிகள் இருந்தனரா என்பது எனக்குத் தெரியாது. அப்படிச் சிக்கியிருந்தாலும் அவர்கள் சொந்தப் பெயரில் இருந்திருக்க மாட்டார்கள் என்ற நடைமுறை யதார்த்தம் - பார்த்திபனால் வலிந்து புகுத்தப்பட்டுள்ளவாறு தோற்றமளிக்கும் விமான விபத்து - (இதுவே கதையின் முக்கிய திருப்புமுனையாக அமைகின்றபோதும்) அவ்வாறு

www.tamilarangam.net

புகுத்தப்படவில்லை என்று சமாதானம் கொள்ள வைக்கின்றது.

பார்த்திபனின் கதைகளில் சாதாரணமாகவே நாம் அனுபவிக்கக்கூடிய முக்கியமானது நகைச்சுவை. இது புதுமைப்பித்தன் கதைகளில் வருவது போலவுமல்ல. பாரதியாரின் எழுத்துகளில் வருவதைப் போலவுமல்ல. டானியலின் பேச்சில் வருவது போலவுமல்ல வேறு ஏதோவொன்று. இன்றைய இளவட்டங்களின் கூட்டு வாழ்க்கை மூலம் உருவாக்கப்பட்ட பாமர நகைச்சுவை. நாம் அன்றுடம் சந்திக்கும் நபர்களின் சாதாரண பேச்சேதான் பார்த்திபன் கதைகளில் நகைச்சுவையாகின்றது. இதை இந்த அகதிகள் முகாம் கூட்டு வாழ்வை அனுபவித்தவர்கள் நன்கு உணர முடியும். இதனை இன்னும் நன்றாகவே "கனவை மிதித்தவன்" தொடரில் காணலாம்.

வெளிநாடுகளில் வாழும் தமிழ் இளைஞர்கள், இங்குள்ள பெரும்பான்மை மக்களைப் போலவே தொலைக்காட்சி அடிமைகளாகிவிடுகின்றனர். தொலைக்காட்சி அடிமையாவதற்கு விளையாட்டுகளும் ஒரு காரணமாக அமைந்துவிடுகின்றன. மக்களிடையே குரூர ரசனைகள் இன்று கலையாக்கப்பட்டுவிட்டது. இவ்வாறான குரூரவிளையாட்டுகளில் ஒன்றுதான் 'றெசிலிங்'. ரி.வி. சகிதமிருக்கும் இளைஞர்களுக்கு மத்தியில் இதுபோன்ற "றெசிலிங் பார்க்கக் கூட தகுதியற்ற உடம்பு". மிகவும் சாதாரண பகிடிதான். இது பார்த்திபன் கதையில் வருகின்றபோது, ஒன்று இவ்விடத்து சராசரி நிகழ்வுகளை காட்டப் பயன்படுகிறது. மற்றது கதாபாத்திரத்தின் மனோநிலை அதன் மூலம் சராசரி இளைஞர்களின் உளவியல், இவை இரண்டுக்கும் அடுத்து இக் காலத்தின் நடைமுறையையும் காட்டுகின்றது. இவ்வாறே அநேக இடங்களில் இவற்றை நாம் அவதானிக்கலாம்.

ஓய்வில்லாது, தரிப்பில்லாது ஓடிக்கொண்டிருக்கும் இலங்கை அகதிகளின் இன்றைய நிலையைச் சரியாகவே படம் பிடித்து காட்டும் இச் சிறுகதை இவ்வாண்டில் புகலிடச் சூழலில் எழுந்த தரமான சிறுகதை என்று துணிந்து கூறலாம். இவை காலம்காட்டும் முற்றுப் பெறாத செயல்வினைகள். ஆவணங்கள். பார்த்திபன் பல நல்ல சிறுகதைகள் எழுதியிருக்கின்றார். இவற்றினைத் தொகுத்து ஒரு சிறுகதைத் தொகுதி வெளியிட்டால், அது பரவலான வாசகர்களை சென்றடையக்கூடும். இங்கு தோன்றியிருக்கும் பதிப்பகங்கள் இதனை செய்யலாம்.

இறுதியாக இக் கதை பற்றிய இன்னும் இரண்டொரு வார்த்தைகளோடு எனது குறிப்புகளை முடித்துக் கொள்கின்றேன். பாலுவின் கதையாக இருக்கின்ற தெரியவராதது — அவனது குடும்பம், அவர்களின் நிலை, அக் குடும்பத்தில் அக்காவின் நிலை, அண்ணா, அவன் சார்ந்த இயக்கம், இன்று இயக்கங்களின் நிலை, அவர்களின் நடவடிக்கைகள், தம்பி, தங்கையைக் காட்டுவதன் மூலம் மக்களின் நிலை, எமது குழந்தைகளின் நிலை, 5 வருடங்களாக ஒரு அறையில் உறவாகிவிட்ட சிவகுமாரின் நிலை, யேர்மன் அரசின் அகதிகள் பற்றிய நிலைப்பாடு, இங்குள்ள ஆயிரமாயிரம் இளைஞர்களின் ஏறிக் கொண்டிருக்கும் வயது, அவர்களின் அடையாளம் இழந்த பரிதாபம்

வாரகளு, அடிமைகளாகப் பயந்தும், இறந்துமே வேலைகளைச் செய்தாலும், அதிலும் நிரந்தரமற்ற அடுத்த என்ன என்று தெரியாத ஒரு சூனியப் போக்கு, சமூகத் தொடர்புச் சாதனங்களின் "மனித சீரழி"க்கைக் காவும் அரச அதிகாரத்திற்கும், அதன் தேவைகளுக்கும் உட்பட்ட நிலை என்று இன்னும் பல நிறையத் தகவல்களை தன்னகத்தே உள்ளடக்கியிருக்கின்றது. இவை இக்கதையின் இன்றியமையாத கூறுகளாகவும் இருக்கின்றன. இவையெல்லாம் நாம் கண்டும் காணாத, நாமே அதுவாகியும் சிந்திக்காத யதார்த்தங்கள். இக்கதை என்னை இன்னும் சிந்திக்க வைக்கின்றது.

www.tamilarangam.net

வாசகர்களே சந்தாதாரர்களே ஆக்கதாரர்களே

'அஆஇ' தனது ஓராண்டு பூர்த்தியை எய்தியுள்ளது. இது வரை எம்மை ஊக்கிவித்து ஒத்துழைத்தது போல் மேலும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். பத்திரிகைக்கான செலவீனங்கள் நாம் எதிர்பார்த்ததை விட மேலும் அதிகரித்துள்ளதாலும், பக்கங்களின் அளவையும் தரத்தையும் அதிகரித்தமையாலும், தவிர்க்கமுடியாத காரணங்களால் சந்தாப்பணத்தையும் அதிகரித்துள்ளோம். புதிய சந்தாக்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| புதிய சந்தாக்கள் | | ஒரு வருடம் |
| நெதர்லாந்து (தபாற்செலவு உட்பட) | | Fl 15.00,- |
| ஐரோப்பிய நாடுகள் | " | Fl 20,00,- |
| ஏனைய நாடுகள் | " | FL 20.00,- |

கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.


- பாரதியார் -

www.tamilarangam.net

# வளைகுடாவில் மேற்குலக நாடுகளின் — இராணுவத்தலையீடு நீதியானதா?

-மனோ-

இன்று வளைகுடாவில் எந்த நேரமும் போர் மூளக்கூடிய நிலை தோன்றியுள்ளது. அமெரிக்காவினதும் அதன் சார்பு நாடுகளிலிருந்தும் தினமும் அது வாயுதங்கள் டாங்கிகள் போர்




விமானங்கள் ஏவுகணைகள் படைகள் வளைகுடாவை நோக்கி வந்த வண்ணமிருக்கின்றன.

பெரும் பெற்றோலிய பணமுதலைகளான 'ஷேக்'குகளினால் ஆளப்பட்டு வந்த குவைத்தை சதாம்கூசேன் தலைமையிலான ஈ.ராக் ஆக்கிரமித்துக் கொண்டமையால் அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகளுக்கும் ஈ.ராக்குக்குமிடையிலான போர் மூளும் நிலமாக வளைகுடா மாறியுள்ளது. தமது முக்கிய நலன்களைப் பேணும் ஒரு சிறிய நாட்டை அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பதுமே தமது பிரதான பணி என புகழும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்திருக்க முடியாது. மேலும் சில உதாரணங்களை நினைவு கூர்வதன் மூலம் பல விடயங்களை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

உலகில் தனது மேலாதிக்கத்தை உறுதி செய்து கொள்வதற்கு சாதகமான சூழலை உண்டாக்கும் நோக்கில் மேற்கும் உலகிற்




கிழக்குலகின் 'புஷ்'

திட்சரும் கூடிக் கொள்கிறார்கள். இன்று ஈராக்கை முற்றுகையிடுகின்ற இந்த நாடுகளின் எந்தவித எதிர்ப்புமில்லாமல் அமெரிக்கா பனமாவையும், கிறனடாவையும் ஆக்கிரமித்துக் கொண்டது. இதே அமெரிக்கா லிபியாவின் மீது குண்டுத்தாக்குதலைச் செய்த போதும் இந்த நாடுகளில் ஒன்றாவது எதிர்ப்புக்குரல் எழுப்பவில்லை. அமெரிக்காவினதும் ஐரோப்பிய நாடுகளினதும் இதயபூர்வமான ஆதரவு இல்லாமல் இஸ்ரேல் தான் கைப்பற்றி வைத்துள்ள பலஸ்தீன பிராந்




மேற்குலகின் 'ஹுசேன்'

எந்த நிலையிலாவது தன்னிச்சையிலான இராணுவ தலையீட்டை சர்வசாதாரணமாக்குவதற்கு இந்த வளைகுடா நெருக்கடியை பயன்படுத்த முயற்சிக்கிறது அமெரிக்கா.

www.tamilarangam.net

மத்திய கிழக்கு நாடுகளில் பெரும்பாலானவற்றில் சர்வாதிகார ஆட்சியே நிலவுகிறது. இந்நாடுகள் மேற்குலகு நாடுகளுடன் சினேகபூர்வமாக இருக்கும் வரை இந்நாடுகளுடன் இவர்களுடைய சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக மேற்குலகம் எதுவித அதிருப்தியையும் காட்டவில்லை இவ்வாறு ஜனநாயக விரோத ஆட்சி மலிந்த எண்ணைப் பெரும தலாளிகளான 'ஷேக்'குகளினால் ஆளப்படுகின்ற சவுதி அரேபியா குவைத் போன்ற நாடுகள் மேற்குலக ஆதரவை பெற்று வந்தன. அதே போன்று ஈரான், ஈராக் யுத்தத்தின் போதும் ஈரான் ஒரு அமெரிக்க எதிர்ப்பு. மேற்குலக எதிர்ப்புப்பக்கத்தில் இருந்தமையால் ஈராக்கிற்கு நச்சு இரசாயன ஆயுதங்கள் ஜேர்மனியும் அணுவாயுத உபகரண பிரான்சும் வழங்கியிருந்தன.

மத்திய கிழக்கில் அடக்கப்பட்ட மக்களுக்கான தீர்வு அப்பிரதேச மக்களினால் மட்டுமே உருவாக்க முடியும். அதாவது அது எந்த நிபந்தனைகளுமற்ற ஒரு சுய நிர்ணயத்திற்கான தீர்வாகவே அமைய முடியும்.

1. பலஸ்தீன மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காக நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர். பலஸ்தீனத்தை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலை மேற்குலக நாடுகள் ஏன் பகிஸ்கரிக்க முன்வரவில்லை.

2. மேற்குலக பத்திரிகைகள், தொடர்பு சாதனங்கள், அரசுகள் பலஸ்தீனர்களையும் இஸ்லாமியரையும் நம்பத்தகாதவர்களாகவும் ஆக்கிரமிப்பாளர்களாகவும் காட்டி வருகின்றன.

3. பல ஆண்டுகளாக துருக்கி, ஈரான், ஈராக்கிய அரசுகளால் அடக்கியொடுக்கப்பட்டுவந்த குர்திஸ் மக்கள் தமது இறைமையுள்ள குர்திஸ்தானை நிறுவுவதற்கு போ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராட்டி வருகின்றனர். அதன் விளைவுயாதெனில் அவர்கள் ஈராக்கிய அரசு நேர்மனியிடமிருந்து பெற்ற நச்சுவாயுக்களின் பயன் பகுதி பெண்கள், குழந்தைகள் வயோதிபர் என்றும் பாராமல் படுகொலை செய்ததுமையே. இந்த மேற்குலக நாடுகள் குர்திஸ் மக்களின் அடக்கியொடுக்கும் இவ்வரசுகளுக்கான பொருளாதாரத் தடைகள் ஏற்படுத்துவதை மறுத்து வந்தனர்.

குவைத் ஒரு ஜனநாயக நாடு அல்ல இது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஒரு சேவைக்கியுக்குடன் அங்கிருந்த எண்ணைய் ஷேக்கிளிடம் ஒப்படைக்கப்பட்டு எண்ணெய் வளத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக உருவாக்கப்பட்ட நாடு. குவைத்தில் பணிபுரியும் பெரும்பான்மையான மத்திய கிழக்கு தொழிலாளர்களுக்கு எந்த விதமான ஜனநாயக உரிமைகளும் அங்கு இல்லை.

இது ஈராக்கின் குவைத்மீதான ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துவதாக அமையாது. குவைத் மக்கள் மட்டுமே தீர்மானிக்க வேண்டும், தாம் எந்த தேசிய நாட்டவர் என்பதை. மேற்குலக நாடுகளின் தேவையெல்லாம் தொடர்ச்சியாக மலிவாக எந்தத்தடைகளுமில்லாமல் எண்ணைய் பெறுவது எப்படி என்பதேயாகும். ஆகையினால் மத்தியகிழக்கு மக்கள் தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை தையிவிரு. மேற்குலக தொழில் நிறுவனங்களுக்கும் அந்நாடுகளுக்கும் அவசியமாகிறது.


மேற்குலக முஸ்லீம்கள் ஒரு மத வெறியர்களாகவும் இரத்ததாகம் கொண்டவர்களாகவும் காட்டும் 'கிளிரியா'க் சிடச்சல் கிளப்பப் பட்டுள்ளது. யுத்தத்திற்கு தயாரான ஒரு மேற்குலக பொதுசன அபிப்பிராயம் தோன்றியிருகிறது. ஐரோப்பாவில் வாழும் வெளிநாட்டவரான முஸ்லிம் மக்களையும் ஏனைய மூன்றாம் உலகமக்களையும் இவ்வருவெறுப்பான பிரச்சாரம் பாதிப்படையச் செய்கிறது.

www.tamilarangam.net

மேலும் இங்குள்ள இன வெறிக்கும் இது தூபமிடுகிறது.

# இலங்கையிலிருந்து.....

## ஒரு தாயின் கடிதம்



இங்கு நடைபெறும் ச
ம்பவங்களை நீங்கள் கேட்டும், பார்
த்தும் அறிந்திருப்பீர்கள் யூன் 11 ல்
போர் பிரகடனப்படுத்தியது. தமிழ்
மக்கள் எல்லா வளத்தாலும் பாதி
க்கப்பட்டுள்ளார்கள். அரசாங்கம்
பொருளாதாரத்தடையை விதித்தது.
ல் மக்கள் பட்டினியை எதிர்நோ
க்க வேண்டியுள்ளது. கப்பலில்
சாமான்களை அனுப்புவதாகக் கூறி சி
றிய கப்பல்களில் கொஞ்சச் சாமா
ன்களை அனுப்பி உலகத்தை ஏமா
ற்றுகிறார்கள். [illegible]

சட்டியை காசு கொடுத்து வாங்குகி
ன்றார்கள். அப்படி வாங்கவும் சா
மான்கள் சந்தையில் இல்லை. இ
ப்போது காட்டுப்பாதைகளால் சா
மான்கள் எடுத்துவருகின்றார்கள்.
முன்பு 1 kg சீனி 75/= 1 kg அரிசி 40/=
1 றா பாண் 10/= 1 போ ம.எண்ணெ 150/=
1 போ. பெற்றோல் 250/= பற்பசை, தீப்
பெட்டி, பற்றறி ஒன்றும் கிடைப்பது
1 pair பற்றறி முன்பு விற்றது. தற்போ
து 1 pair 100/= மின்சாரமும் இல்லை.
பற்றறியும் இல்லாமல் செய்திகள்

www.tamilarangam.net

கேட்க முடியாது. பேப்பர்தான் பார்ப்பது. சுன்னாகம் மின்சார நிலையம் பொம்பரினால் தாக்கப்பட்டு விட்டது. இங்கு ஹெலி, பொம்பர், அவ்ரோ, சினச்சகடை ராச்சதம். இது 300 Kg குண்டுகளைத்தள்ளும். தினமும் தாக்குதல்கள் நடைபெறும். சின்னச்சத்தம் கேட்டாலும் உடனே பதுங்கு குழிக்குள் போய் விட வேண்டும். வீடுகளில் குண்டு விழுந்தால் வீடு தரைமட்டமாகி விடுகின்றது. வீட்டிலே இருப்பது பாதுகாப்பில்லை. இரவிலும் குண்டு போடுவார்கள். ஷெல் (ஆட்டிலறி) அடிப்பார்கள் இவ்விடங்கள் அதிகமாகத்தாக்கப்படுகின்றது. கோட்டைக்குப் போகும் பாதைகளிலிருக்கும் வீடுகளுக்கு அதிகதாக்கம். யாழ்நகரம் சுடுகாடாக மாறியுள்ளது. தற்போது பரவலாகவும் தாக்குகின்றார்கள். இங்கு வங்கிகள் வேலை செய்வதில்லை. அதனால் பணப்புழக்கமில்லை. காசோலைகள் ஒன்றும் மாற்ற முடியாது. கப்பலில் நடமாடும் வங்கிச்சேவைகள் நடைபெறும் எனப்பத்திரிகை செய்திகள் வெளிவந்தன. அஞ்சல் கப்பல் வந்தவுடன் ஊரடங்குச்சட்டம் போடப்பட்டுள்ளது. அதுவும் ஒன்றும் நடைபெறவில்லை. இப்படியே அரசாங்கம் தமிழ்மக்களை வருத்துகின்றது.

LTTE வீட்டிற்கு இரண்டு பவுண் வாங்குகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியில் செல்வதற்கு தடை. உளவாளிகள் ஊடுருவல் இருப்பதால் அவர்களிடம் pass எடுத்துத்தான் போகவேண்டும். pass இல்லாமல் வெளியில் போகவோ வரவோ அனுமதிக்கப்படமாட்டாது. வெளிநாட்டிலிருந்து வருபவர்களிடம் 4 பவுண் கேட்கிறார்கள். இவரை கூடிய காசு கேட்கிறார்கள். குடும்பத்தினர் வெளியில் செல்வதானால் வீட்டுத்திறப்பு அவர்களிடம் கொடுக்க வேண்டும். பாடசாலைகள் கல்வி நிலையங்கள் ஒன்றும் இயங்குவதில்லை. ஆண்களை பதுங்கு குழிகள் வெட்டக்கட்டிச் செய்கிறார்கள். அடுத்த Generation படிக்கட்டும். இப்போது போராட வரும்படி கேட்கிறார்கள். எல்லோரும் பிள்ளைகளை வீட்டிற்குள்தான் வைத்திருக்கின்றார்கள். வெளியில் சென்றால் கூட்டிப் போய் விடுவார்கள் என்பது என்போன்ற தாய்மார்களுக்குத்தெரியும்.

(பாதுகாப்பு காரணங்களால் பெயர் தரப்படவில்லை — இலங்கை...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "சட்டத்தின்முன்னால்."

## VOR DEM GESETZ

- FRANZ KAFKA-(1883 -1924)

ஜேர்மன் மொழி மூலத்திலிருந்து தமிழில் ந. சுசீந்திரன்

இக் கதை DasUrteel (தீர்ப்பு) எனும் சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாவல் இலக்கியத்தை நவீனப்படுத்திய ஜெர்மன் மொழி எழுத்தாளர் FRANZ KAFKA. மேலும் இலக்கியத்தில் கதை எழுதுபவனே கதாபாத்திரமாக மாறி எழுதும் முறையைக் கொண்டு வந்ததும் KAFKA எனக் கூறப்படுகிறது. இவரது எழுத்துக்கள் நம்பிக்கை வரட்சியிலிருந்து எழுந்தவை எனக்கூறப்பட்ட போதும், 60களில் ஆசிய இலக்கியத்தாரிடம் இவரது பாதிப்பு உண்டு. KAFKA வின் இறப்பிற்கு அதிக காலத்துக்குப் பின்னரே உலகத்தாரால் அறியப்பட்டார்: யூலை 1883ல் பராக் (Prug) இல் பிறந்த இவர் காச நோய் காரணமாக 1922 இல் தனது சட்ட வல்லுனர் வேலையிலிருந்து ஒதுங்கினார். 1924இல் காலமானார். தனது உயிலில் தனது ஆக்கங்கள் சகலவற்றையும் எரித்துவிடுமாறு எழுதியிருந்தும், அவரது நண்பன் Max Brod இனால் அவை அழிக்கப்படாமல் உலகிற்கு வெளிக்கொண்டு வரப்பட்டன.

தமிழில் குறைந்த சிறுகதைகளே எழுதிப் புகழ் பெற்ற "மௌனி" (அழிச்சுடர், "மௌனி கதைகள்") KAFKA வை அடியொற்றி எழுதியவர் என்று கூறப்படுகிறது. KAFKA வின் படைப்புக்கள் 60களை ஒட்டிய காலப்பகுதியில் சி.சு. செல்லப்பாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "எழுத்து"வில் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கின்றன.

----மொழிபெயர்ப்பாளர்----

சட்டத்தின் முன்னே ஒரு காவலாளி நின்றுகொண்டிருக்கிறான். இந்தச் சட்டத்தின் உள்ளே செல்ல அனுமதி கேட்டு ஒரு நாட்டுப்புறத்தவன் அந்தக் காவலாளியிடம் கெஞ்சிக்கொண்டிருக்கிறான். அவனோ இப்போது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உட்செல்ல அனுமதிக்க முடியாது என்கிறான். அப்போதுசம பயாசத்த நாட்டவன் பிறகு வந்தால் உள்ளுக்குப் போகலாமா என்கிறான்.

"சிலநேரம் போகலாம். ஆனால் இப்ப போகேலாது."

.....................

எப்போதும்போலவே சட்டத்தின் வாயில் திறந்திருப்பதாலும், காவலாளியும் ஒரு பக்கமாய் நிற்பதாலும், உள்ளே என்னமாதிரி இருக்கும் என்று பார்க்க நன்றாக வளைந்து எட்டிப்பார்க்கிறான். இதைக்கண்டதும் காவலாளிக்குச் சிரிப்பு வருகிறது.

"உள்ளே போய்ப் பார்க்கோணும் போலிருந்தால் என்னிட்டைக் கேட்காமலே போய்ப் பார்க்கலாம். ஒன்று சொல்லுறேன், எனக்கு அதிகாரம் இருக்குத்தான். ஆனா நான் ஆகக் கீழ உள்ள காவலாளி. உள்ளுக்குப்போகப்போக ஒவ்வொரு மண்டபத்திலும் வாச்மன் நிற்பினம். அதிகாரமும் கூடிக்கொண்டே போகும். மூணாவது ஆளுக்கு முன்னாலே நானே போகேலாது."

இப்படியெல்லாம் கஷ்டங்கள் இருக்குமென்று நாட்டவன் எதிர்பார்க்கவேயில்லை. சட்டமென்பது யாவரும் எப்போதும் அணுகக்கூடியதாகவே இருக்கவேண்டுமென்று அவன் நினைத்துப்பார்த்தான். ஆனாலும் இப்பொழுது விலையுயர்ந்த ஆடையில் (FELZ MANTEL) நிற்கும் காவலாளியைக் கவனமாகப் பார்க்கும்போது, நீண்ட மூக்கு, மெல்லிய, நீளமான கரிய மங்கோலியத் தாடி. பேசாமல் அனுமதி கிடைக்கும்வரை நிற்பது நல்லதென்ற முடிவுக்கு வந்தான். காவலாளி அவனுக்கு தான் கால் வைக்கப் பயன்படுத்திய இருக்கையைக் கொடுத்தான். வாசலின் ஓரத்தில் அமரவும் அனுமதித்தான்.

அந்த மனிதனே மாதங்களாக, வருடங்களாக அங்கேயே இருக்கின்றான். உள்ளே போய்விட எல்லா முயற்சிகளும் செய்து பார்த்தான். இவனது கெஞ்சல்கள் காவலாளிக்கு அலுத்துப்போய் விட்டது. காவலாளி அடிக்கடி இவனிடம் ஒரு சிறிய விசாரணையே நடாத்திவிடுவான். இவனது நாட்டைப்பற்றியும், இன்னும் எத்தனையோ பிற கேள்விகள் -யாவும் சம்பந்தா சம்பந்தமில்லாத, அனுமதிக்கு அவசியமேயற்ற, பெரிய அதிகாரிகள் கேட்கும் கேள்விகள். இவற்றின் இறுதியில் இன்னும் இவனை உள்ளே அனுமதிக்க முடியவில்லை என்பதே காவலாளியின் விடை

தனது பயணத்திற்காக பலவற்றையும் கொண்டுவந்திருந்தான் நாட்டவன். காவலாளிக்கு லஞ்சம் கொடுப்பதில் அவையும் தீர்ந்து

www.tamilarangam.net

போயின. இவற்றை விடப் பெறுமதியானதே இனிமேல் லஞ்சமாகக் கொடுக்க முடியும். "இந்த வழியில் செய்து பார்க்கவில்லையே என்று நீ நினைத்துவிடக் கூடாது என்பதால்தான் நான் இவற்றை ஏற்றுக்கொள்கிறேன்" என்று காவலாளியே எல்லாவற்றையும் தாராளமாக எடுத்துக்கொள்கிறான். பல வருடங்களாக இந்த முதல் காவலாளியையே இடைவிடாது இந்தநாட்டவன் அவதானித்துக்கொண்டிருந்ததால், ஏனைய காவலாளிகளை மறந்தேபோய்விட்டான். இந்த முதலாவது காவலாளியே சட்டத்தின் உள்ளே செல்வதற்கான ஒரு தடையாக அவனுக்குத் தெரிகிறது. முதல் ஒரு வருடம் பயமொன்றுமில்லாமல் சத்தம்போட்டு இந்த வேதனை நிகழ்ச்சிகளைத் திட்டித் தீர்த்தான். ஆனால் காலம் செல்லச்செல்ல அவனுக்கும் வயதாகியது. மெதுவாக தனக்குள்ளதாகவே தன்பாட்டில் புறுபுறுத்தான். பல வருடம் இந்தக் காவலாளியையே பார்த்துப்பார்த்து காவலாளியின் உடுப்பின் கழுத்திலுள்ள உண்ணிகூட இவனுக்குத் தென்படலாயிற்று. குழந்தைத்தனமாக காவலாளியிடம் அனுமதி பெறுவதற்கு உண்ணியைக் கூடக் கேட்டுவிட்டான்.

இவனது கண்கள் பார்வை மங்கின. இருட்டிவிட்டதா அல்லது தனது கண்கள் மட்டும் தான் பார்க்கமுடியாதிருக்கிறதா என்றுகூட அவனுக்குத் தெரியவில்லை. சட்டத்தின் வாசலிலே அந்த இருட்டிலும் மங்காதபிரகாசம் ஒன்றை அவன் காண்கிறான். அதன் பின்னர் அவன் அதிக காலம் வாழவில்லை. அவன் இறப்பதற்கு முன்னதாக ஒரே ஒரு கேள்விக்காக அவனது இதுகாலவரையிலான அனைத்து அனுபவங்களும் அவனது சிந்தனையில் ஒன்றுகூடுகின்றன. காவலாளியிடம் இதுவரை கேட்காத அந்தக் கேள்வியைக் கேட்டுவிடவேண்டுமென்பதற்காக மூப்படைந்து, முதுகு கூனி, அசைவிழந்து தடியாகவிட்ட தன்னுடலை ஒருநிலைப்படுத்த முடியாத நாட்டவனும் இப்போது மெதுவாகக் கையசைப்பினால் மட்டுமே காவலாளியுடன் பேச முடிகிறது. கூனிக்குறுகி உடல் சிறுத்த அந்த நாட்டவனை விளங்கிக்கொள்ள சற்று அதிகமாக வளைய வேண்டியிருக்கிறது காவலாளிக்கு.

"இன்னும் என்னப்பா கேக்கப்போறாய்..... சரியான ஆவேசம் பிடிச்ச ஆளாயிருக்கிறாயப்பா நீ.."

"எல்லோரும் சட்டமென்று சொல்லிக் கொள்ளுகினம் ஆனால் உள்ளுக்குப்போற அனுமதிக்குமட்டும் என்னைவிட இவ்வளவு காலமும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருத்தரும் வரவில்லை." நாட்டவனின் இறுதிக் கேள்வி இது.

இந்த மனிதன் தனது இறுதிக்கட்டத்தில் இருக்கிறான் என்றுகண்ட காவலாளி செவிடாகிக்கொண்டிருக்கும் நாட்டவனின் காதுகளுக்குஎட்டவேண்டுமென்பதற்காகத் தொண்டை வைத்தான்,

"இந்த வாசல் உனக்காக மட்டுமேதிறக்கப்பட்டிருந்தது. உன்னைவிட இதில் வேறு யாருமே அனுமதி பெறமுடியாது. இதோ இப்பொழுது இதை நான் மூடிவிட்டுப் புறப்படுகிறேன்."

----------

— புலம்பெயர்ந்த தமிழர்களின் சில சஞ்சிகைகள்

**தூண்டில்**
மாத சஞ்சிகை, வருட சந்தா 40DM,
தொடர்புக்கு Sudasien Buro,
Grossehelm str 58, 4600 Dortmund,
WEST GERMANY

**புதுமை**
அரசியல் பொருளாதார கலை கலாசார
காலாண்டிதழ். வருட சந்தா 12US$
தொடர்புக்கு Mainzer Land str147,
6000 Frankfurt, WEST GERMANY

**மனிதம்**
இருமாத இதழ்
ஒரு வருட சந்தா 18SFr, தொடர்புக்கு
POSTFACH : 12
3000 BERN : 11
SWITZERLAND

**அக்னி**
இருமாத சஞ்சிகை. வருட
சந்தா 20DM. தொடர்புக்கு- Agni, Allen
str 17, 7144, Asperg, WEST
GERMANY

**சுவடுகள்**
Herslebs Gate 43
0578, Oslo 5
NORWAY

**தேடல்**
THEDAL
Box 1031, Station F,
Toronto, Ont
M4X 2T7, Canada

"SAKTHI",
boks 127, 1432 AAS-NLH
NORWAY

'தாயகம்'
Georgicka Communications
Box 1031, Station F,
Toronto, Ont
M4X 1G6, Canada

**பனிமலர்**
வெளியீடு
தமிழ்மக்கள் புதிய கலாச்சாரக் குழு
BCM POLARIS
LONDON WC1N 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்றஇதழ்தொடர்.......

# இலங்கையில் இராணுவமயமற்ற அரசியல்
## உடனடியானதும் கடினமானதுமான பணி.

ஆங்கிலமொழிமூலம் டயபால திரணகம

## கருத்து வேறுபாட்டை வன்முறையிலும் பயங்கரவாத முறையிலும் அடக்குதல்:

1987 முதல் JVP/DJV யினர் ஆயுதப் போர் முறையினை தயவு தாட்சண்யமற்ற வகையில் நடத்திச் சென்றனர். அவர்களது இலக்கு பொம்மை அரசுமாத்திரமன்றி தமிழர்களது சுயநிர்ணய உரிமையினை ஆதரித்தவர்களையும், தமிழ் பிரதேசங்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் ஒரு அரசியல் தீர்வாக பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பியவர்களையும் ஆதரித்தவர்களையும் மிருகத்தனமான முறையில் கொன்றொழிப்பதிலும் சென்றது. இந்த வகையில் மரபுவழி இடதுசாரிகளும் நவீன இடதுசாரிக்குழுக்களும் வேறுபுரட்சிகரக் குழுக்களும் JVP/DJV யினரின் பயமானதாக்குதலுக்கு பலியாகினர். ஆரம்பத்தில் இவர்களது பிரச்சாரத்தில் பாதுகாப்புப்படையினரை குறிப்பாக கீழ்மட்டத்தினரை JVP/DJV யினர் வென்றெடுக்கக்கூடியதாக இருந்தது. இதற்குக்காரணம் இந்த இராணுவத்தினரும் அதே சமூகத்தளத்திலிருந்துவந்தவர்களுடன்

www.tamilarangam.net

JVP/DJV யினரது ... சிங்கள மொத்தக்கோட்பாடு, ஒரு தலைமைத்துவக்கோட்பாடாக அமைந்ததுமாகும். JVP/DJV யினர் சிங்கள தேசிய வாதத்தை அரசியல் ஆயுதமாகப் பாவித்து பூர்ஷ்வா ஆட்சியினரைக் கவிழ்க்கும் ஒரு தெளிவான தந்திரோபாயத்தைத் தாங்கள் கொண்டிருப்பதாக வாதாடினார்கள். இடதுசாரியினரைத் தாக்கியதன் மூலம் தங்களுக்கும் ஏனைய இடதுசாரி சக்திகளுக்கும் மற்றும் ஜனநாயகச் சக்திகளுக்குமிடையில் ஒரு எல்லைக்கோட்டினை இரத்தத்தினால் போட்டுக்கொண்டனர். இது இவர்கள் மேலும் ஒழுங்குபடுத்தப்பட்ட பாரம்பரிய இடதுசாரிகளது செல்வாக்கினை தற்போது கொண்டுள்ள வளர்ச்சிபெற்ற தொழிலாள வர்க்கத்தினரிடமிருந்து அன்னியப் படுத்தியது. இவர்கள் அரசாங்கத்தினதும் ஆதரவாளர்களை தொடர்ந்து கொன்றொழிக்கும் போது இராணுவத்தின் விழிப்பான ஓர் கெரில்லாப் பிரிவு தோற்றம் பெற்றது. JVP/DJV யினர் தங்களது அரசியல் பாதையின ஏற்றுக்கொள்ளாத தொழிற்சங்கத்தினரையும், இடதுசாரிகள் உட்பட்ட அனைத்து கட்சிகளையும் அவர்களது பத்திரிகைகளையும் தடைசெய்தது மாத்திரமன்றி மனித உரிமை நிறுவனங்களையும் அரசாங்க சார்பற்ற (N.G.O) சமூக புனர்வாழ்வு நிறுவனங்களையும் தடை செய்தனர். இந்நிறுவனங்களுக்கு கொலைப்பயமுறுத்தல்களை அறிவித்ததுடன் அதனை நடைமுறைப் படுத்தினர். கள் JVP/DJV யினர் தங்களது அரசியலுக்கு அனுதாபமான SLFP/MEP போன்றோரைக்கூட 1988 பொதுத்தேர்தலில் பங்கு கொண்டமைக்காக துரோகிகளாகவே கருதினார்கள் இக் கட்சிகளது அபேட்சகர்கள், கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் கொல்லப்பட்டார்கள். இது JVP/DJV யினர் முன்னைய போதுமில்லாதவாறு அரசியலிருந்து அன்னியப்படுத்தியது. இவர்கள் கிராமப்புறங்களில் ஊர்வலங்களையும் வேலைநிறுத்தங்களையும் கட்டாயப்படுத்தி செய்வித்தனர். சென்ற வருடத்தின் நடுப்பகுதியில் இவ்வேலை நிறுத்தங்களிலும், ஊர்வலங்களிலும் பங்கு கொள்ளப்பணிய மறுத்தவர்கள் கொலை செய்தார்கள். இவர்களது பொது வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ள மறுத்தமைக்

www.tamilarangam.net

காக 250 க்கும் மேற்பட்ட பாடசாலை ஆசிரியர்களையும், 200
அரசாங்க போக்கு வரத்து சாரதிகளையும் சர்வசாதாரணமாக சுட்
டுக்கொன்றனர். இவர்களால் தடை செய்யப்பட்ட அரசாங்கத்தி
னது தொலைக்காட்சி சாதனங்களில் பணிபுரிந்தமைக்காக (இலங்
கையில் வேறு தனிப்பட்ட வேறு தொலைக்காட்சி, வானொலி சாதங்க
ள் இல்லை) சில திறமை வாய்ந்த செய்தியாளர்களை கொன்றொ
ழித்தனர். JVP/DJV யினரது மரணதண்டனைகளும் பயமுறு
த்தல்களும் ஏனைய நடவடிக்கைகளும் மக்கள் மத்தியில் அவ
ர்கள் அதிகாரத்திற்கு வருவது யதார்த்தமாகிவிட்டது போன்ற
ஒரு பயப்பீதியின் உருவாக்கி அந்த எண்ணத்தில் அவர்களது
கட்டளைகளுக்கு பணிந்து நடந்தனர். JVP யினரது மக்
கள் பற்றிய கண்ணோட்டம், ஜேர்மனிய மக்கள் தனது கட்
டளைகளுக்கு பணிவதற்கு மட்டும் தகுதி வாய்ந்த மந்தைக்கூ
ட்டமாக கருதும் ஹிட்லருக்கும் மக்களுக்கும் இருந்த உற
வையே ஒத்திருந்தது. JVP/DJV யினரால் தடைசெய்யப்பட்ட
அரசியல் கட்சிகளும் ஏனைய நிறுவனங்களும் தனிப்பட்டவர்களு
ம் தம்மைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக ஆயுதம் ஏந்த
வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அரசாங்கத்துக்கு பாதுகாப்புப் ப
டையினரை பெற்றுக்கொள்ள முடியாமையினால் JVP/DJV யினரை ந
சுக்குவதற்கு இயலாதிருந்தது. கடந்த வருடம் இறுதியில் JVP/DJV யி
னர் அரசாங்கப்படையினரை மாதம் முடிவதற்குள் தங்கள் பதவியி
லிருந்து ராஜினாமா செய்யும் படி கட்டளையிட்டு இருந்தனர். அவர்
கள் அவ்வாறு ராஜினாமா செய்யாது விடின் அவர்களது குடும்பத்தி
னரை கொலை செய்வதாகப் பிரகடனப்படுத்தினார்கள் இக்கோரிக்கை
க்கு பாதுகாப்புப் படையினர் பணிய மறுத்தமையினால் JVP/DJV
யினர் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த பலரைக் கொன்று த
ங்கள் கொலைப் பயமுறுத்தல்களை நடைமுறைப்படுத்தினார்கள். JVP
DJV யினது இன் நடவடிக்கைகளினால் பாதிப்புற்ற அனேகமான
படையினர் மிகத்தீவிரமான அளவில் இதன் பிரதி நடவடிக்கையாக
JVP/DJV யினரது அங்கத்தவர்களையும், ஆதரவாளர்களையும் படு
கொலை செய்யத் தொடங்கினார்கள். சந்தேகத்துக்குள்ளான
JVP/DJV யினது அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் கொ

www.tamilarangam.net

கொலை செய்வது, எரிப்பதும், பிரேதங்களைத் தெருவில் போடுவதும் கடலில் மிதக்க விடுவதும், ஆறுகளில் ஓட விடுவதும் தினசரி நடவடிக்கைகளாகின. இது தற்போதும் அதே அளவில் தொடர்கின்றது இந்த நெருக்கடியின் தீர்வுக்கு U.N.P அரசு ஓர் தீவிர ராணுவ அணுகு முறையையே தேர்ந்தெடுத்தது. அரசானது JVP/DJV யினது தோற்றத்தினையும் வளர்ச்சியினையும் உண்மையான அரசியல் காரணத்தை விளங்கிக் கொள்ளவில்லை. சென்ற வருடத்தின் இறுதியில் JVP யின் தலைமைப் பீடத்தை ரோகணவிஜேவீரா உட்பட இராணுவம் அழித்தது.

## அரச கொலைப்படை தங்கள் அரங்கினை விஸ்தரித்தது

இந்த அரச கொலைப்படைகளை தற்போது ஏனைய அரசியல் எதிரணிகளையும் அழிப்பதில் ஈடுபட்டனர். அரசியலில் எதிரணியிலிருந்து தீவிரமாக இயங்கியவர்களையும் இடது சாரிகள் உட்பட கொன்ற சந்தர்ப்பங்கள் உண்டு. இலங்கை மக்களது சமூகம் முழுவதும் மரணங்களும், வன்முறைகளும் நிரம்பியிருந்தது மக்கள் தங்கள் கருத்துக்களை தடையின்றி வெளியிடும் உரிமை இரு தரப்பிலும் அதாவது அரசதரப்பிலும் JVP/DJV தரப்பிலும் உள்ள ஆயுதக் குழுக்களால் பறிக்கப்பட்டது. JVP/DJV யினரது பாசிச ஜனநாயக விரோதத் தன்மை கொண்ட இராணுவநடவடிக்கைகள் அரசஇராணுவத்தினருக்கு தங்களது கொலைகளை நியாயப்படுத்தவும் விளக்கவும் உதவியது. உண்மையில் இது இலங்கை அரசினது இராணுவ துன்புறுத்தல்களுக்கு மதிப்பினை வழங்கியது. குறிப்பாக JVP/DJV யினரது இராணுவப் பிரிவின் அழித்ததன் பின்னர் இலங் அரசின் இராணுவத்தினர் தங்களது கரங்களை தங்களது வழமையான கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து அப்பாற்பட்ட பகுதிகளுக்கும் விரிவு படுத்தி தங்களைப் பிரதான அரசியல் காரணிகளாகிக் கொண்டிருக்கின்றனர். இப்பயங்கர வளர்ச்சியானது இலங்கை மக்களின் அடுத்த சில 10 ஆண்டுகளுக்கான அரசியல் தலைவிதியினை நிர்ணயிக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

JVP/DJV யினரது அரசியல்கோரிக்கைகளும் ஏனைய இனவாதக்குழுக்களது மாகாண சபைகளை நீக்கும் கோரிக்கையும் தமிழ்மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் வழங்குவதற்கான எதிர்ப்பும் இந்தியாவுக்கு தனது இராணுவத்தின இலங்கை மண்ணில் வைத்திருப்பதற்கு சாட்டாக இருந்தது. இந்திய இராணுவத்தினரின் தொடர்ந்த ஆக்கிரமிப்பு இன்னும் கூடுதலாக தமிழ்ப் பகுதியில் அரசியல் இராணுவ மயப்படுத்தியது. முக்கிய தமிழ்க்குழுக்களான LTTE யினருக்கும் EPRLF க்கும் இடையில் இருந்த பகைபுணர்வு பயங்கரமான ஒரு உச்சக்கட்டத்தின் அடைவதை நிச்சயமாக்கியது. ஏனெனில் LTTE இலங்கை அரசாங்கத்தினது ஆதரவை நாடியது. மறுபுறத்தில் EPRLF க்கு இந்தியாவினால் ஆயுதம் வழங்கப்பட்டது. கிட்டத்தட்ட எல்லா சமூகசக்திகளும் தாக்குதலுக்கோ அன்றி தற்பாதுகாப்புக்கோ ஆயுதமேந்தியது. அரசியல் பேச்சுவார்த்தைக்கு எதிராக எஞ்சியிருந்த சொற்ப இடத்தையும் இந்தப்பயங்கரவாதம் வன்முறை கொலைப்பயமுறுத்தல்கள் எடுத்துக் கொண்டன. அரசியல் தீர்வுக்கான இடைவெளி இராணுவரீதியில் மூடப்பட்டமையினால் இயக்கங்களுக்கிடையே இருந்த பிரிவுகள் மேலும் இறுக்கமடைந்து குறுகிய தேசியவாத உணர்வுகள் ஆயுதரீதியில் வெளிப்பட்டு முன்பு இருந்ததை விட இனங்களை மேலும் அன்னியப்படுத்தியது.

## இராணுவ மயமற்ற அரசியல்

எமது தேசத்தின் நல்வாழ்வு நீடித்து நிலைத்து இருப்பதற்கும் பல்லினத்தன்மையைப் பாதுகாப்பதற்குமான நடவடிக்கையாக ஒரு அரசியல் பேச்சுவார்த்தை மீண்டும் கட்டி எழுப்பப்பட்டு விரிவு படுத்தப்படல் வேண்டும். ஜனநாயக உரிமைகள் மீண்டும் நிலைநிறுத்துவது ஏன், எவ்வாறு என்றும் அதை எவ்வாறு அடக்கப்பட்ட மக்கள் மத்தியில் குறிப்பாக தமிழ்மக்கள் மத்தியில் விரிவு படுத்துவது என்றும் ஒரு அரசியல் கருத்தரங்கு ஒன்றினை நாடு முழுவதும் நடத்துதல் வேண்டும். குறுகிய தே

www.tamilarangam.net

ய வாத சக்திகள் ஆயுதபாணிகளாக வன்முறை ஒன்றையே ஒரேவழி யாக பேச்சுவார்த்தைக்கு உபயோகிக்கும் வரை இத்தகைய கருத்தரங்கு நடைமுறைச்சாத்தியமற்றதாகும். ஒவ்வொரு இனத்திலும் ஆயுதக்குழுக்கள் (சிங்கள மக்கள் மத்தியில் JVP/JVP தமிழ்மக்கள் மத்தியில் LTTE மற்றும் ஆயுதக்குழுக்கள்) நீடித்துவெற்றி பெற அனுமதித்தால் ஒரு இருண்ட அரசியல் சகாப்தத்துக்குள் பிரவேசிக்கும்.

மக்களுக்கு தங்களது கருத்துக்கள் வெளியிடுவதற்கான ஒரு ஜனநாயக அரசியல் சூழ்நிலை அல்லது ஜனநாயக அமைப்புக்கள் இல்லாவிடின் அதிகாரத்தைச் சுவீகரித்துக்கொண்ட வன்முறை ஆயுதக்குழுக்களினால் பயங்கர விளைவுகள் ஏற்படும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் அத்தகைய ஒரு சாத்தியக்கூறு முற்றாக இல்லையென நிராகரிக்க முடியாது. இதன் காரணமாகவே இராணுவ மயமற்ற தாக்கும் வழிமுறை ஒரு அத்தியாவசியமான விடயமாகின்றது. இராணுவ மயமற்ற தாக்கும் வழிமுறைக்கான முக்கிய பொறுப்பு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பெரிய அளவிலானதாகும். தற்போதுள்ள நெருக்கடி தோன்றுவதற்கான அடிப்படைக்காரணத்தை நீக்குவதற்கு அரசானது தன்னை அதில் ஈடுபடுத்துதல் வேண்டும். அரசு தனது வழமையான பௌத்த சிங்களவாத எண்ணத்திற்கும், பாரம்பரியத்திற்கும் தன்னை ஈடுபடுத்திக்கொள்வது முடிவுக்குக் கொண்டுவரப் படல் வேண்டும்.

பல்லினத்தன்மை, பல்வேறு கலாச்சாரப்பிரிவினை ஆகியன உணர்ச்சிகரமான அரசியல் விடயமாக மாறியுள்ள இலங்கை போன்ற நாட்டில் உள்ள அரசும் அரசயந்திரங்களும் மதச்சார்பற்றதாக இருத்தல் வேண்டும்

தமிழர்களுக்கு அதிகாரப்பரவலாக்கல் வழங்குவது இராணுவ மயமற்றதான அரசியல் வழிமுறைக்கு மிக அவசியமானதாகும். அதே வேளை இலங்கை அரசியல் ஜனநாயக மயப்படுத்துவதும் செய்யப்படுதல் வேண்டும். தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வாக இராணுவ வெற்றி அல்ல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

து தோல்வி பற்றி பேசுவது பேரழிவாகும். தற்போதைய போராட்டத்தில் அரசாங்கமோ அன்றி வேறு ஆயுதக்குழுக்களோ வெற்றி பெறுவர்களாயின் அது மக்களது சுதந்திரத்தினதும் விடுதலையினதும் இழப்பின் பேரிலேயே அமையக்கூடியதாகவிருக்கும் ஏனெனில் இரு பகுதியினரில் எவராவது வெற்றியை அல்லது தோல்வியை பெறுவது என்பதன் அர்த்தம் ஒரு பகுதியினர் மீதும் ஏனைய ஜனநாயக சூழல் மீதுமான ஒரு இராணுவ ஒடுக்குமுறை என்பதாகும். மேலும் இலங்கை மக்களது சமுதாயத்தின் அண்மைய வருங்காலத்தின் புரட்சிகர மாறுதலுக்கான வழிவகைகளுக்கு ஓர் பாரிய பின்னடைவினை ஏற்படுத்துவது என்பதுமாகும்

முழு இலங்கை மக்களது சமூக முன்னேற்ற நோக்கிலும் ஒவ்வொரு இனத்தினது முன்னேற்றத்திற்கு அப்பாற்பட்ட நோக்கிலும் பார்க்கும் இந்த இராணுவ மயமற்றதாக்கும் வழிமுறை மிக முக்கியமானது. தற்போதைய நெருக்கடி ஒரு புரட்சிகர நெருக்கடி எனக் கருதப்படலாகாது. JVP/DJV யினரது அரசியல் கோரிக்கைகள் தற்போதைய நெருக்கடியின் தன்மையை பாசிசத்திற்கு முன்னுள்ள நிலைமையை மறைக்கின்றது. JVP/DJV யின் தலைமையை ஒழித்ததன்பின் அரசின் இராணுவ சக்திகள் உண்மையாக அரசியல் அதிகாரத்தை பெறுவதற்கு சந்தர்ப்பம் உண்டு. ஏனெனில் மக்களது சிவில் நிர்வாகம் நிர்வாகம் ஓர் சீர்குலைந்த நிலையிலாவது தொழிற் படாதமையேயாகும். ஆகையினால் இராணுவ மயமற்றதாக்கும் வழிமுறை ஒன்றே இந்த நெருக்கடிக்கு முடிவு காண்பதற்கான வழியாகும்.

இராணுவத்தினரது இராணுவ நடவடிக்கைகளுக்கு அளவுக்கு மீறிய அதிகாரங்கள் வழங்கும் தற்போது நடைமுறையிலுள்ள அடக்கு முறைச்சட்டங்களான பிரிவினைவாதத்தடைச்சட்டம் (PTA) பொறுப்பினின்று விடுதலையாக்கும் சட்டம் (Indemnity Bill) அவசரகாலச் சட்டங்கள் அகற்றப்படுவது ஜனநாயகம் நீடிப்பதற்கு மிக முக்கியமானதாகும்.

அரசு இந்த அடக்குமுறைச்சட்டங்கள் ஜனநாயக அரசியல் கொண்ட எதிரணிக்கெதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட உபயோகித்துள்ளனர். இது JVP/DJV, LTTE யினது இராணுவ மயத்தினை நியாயப்படுத்துவதற்கு உதவியுள்ளது. ஆகவே இலங்கையைப் பொறுத்தவரையில் இராணுவமயமற்றதாக்குவதென்பது அரசியல் சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதென்பதுமாகும்.

தற்போதைய அரசு இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு தனது இயலாமையினை வெளிப்படுத்தியமையால் அது தனது பதவியினின்றும் விலகி ஒரு பொதுத்தேர்தல் நடத்துதல் வேண்டும். ஆனால் ஆயுதக்குழுக்கள் இருக்கும் வரையும், அவர்கள் நிலைத்திருப்பதற்கான அரசியல் சூழல் இருக்கும் வரையும் பொதுத்தேர்தல் என்பது அர்த்தமற்றதாகும். இராணுவ மயமற்றதாக்குதலும் ஒரு கடினமான பணியாகும்.

சோஷலிச ஜனநாயகசக்திகள், தமிழ் மக்களின் உரிமைக்கான தத்துவார்த்த நிலைப்பாட்டினை எடுப்பதன் மூலம் இராணுவ மயமற்ற வழிமுறைக்கு உதவ முடியும். இந்த சோஷலிச ஜனநாயக சக்திகள் சிங்கள பௌத்த தத்துவவாதத்திற்கு எதிராக தத்துவார்த்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் உறுதியான போராட்டத்தை தொடர வேண்டும். இது நடைபெறாவிடின் தமக்குள்ளேயும் தேசிய இனங்களுக்குள்ளேயும் ஆயுதப்போர் தொடர்ந்திருக்கும். உண்மையில் இத்தகைய தத்துவார்த்த அரசியல் போர் வேகமற்றதாகவே அமையும். ஏனெனில் சிங்களப் பௌத்த இனவாத சக்திகள் இதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள். ஆனால் அத்தகைய போராட்டம் இல்லாது விடின் எல்லா இனத்தவர்கட்கும் சமமான அரசியல் உரிமைகள் கொண்ட ஓர் உண்மையான இலங்கையின் தேசிய வாதத்தத்துவம் உருவாவது முற்றாகச்சாத்தியமற்றதாகும். தற்போதைய இராணுவக் குழுக்கள் மேலாதிக்கம் செலுத்தும் வரை இந்த அரசியல் ஜனநாயகப்பணி தடைப்படும்.

www.tamilarangam.net

# லாப நோக்கும் மனிதச் சுற்றாடலும்

'மனிதச் சுற்றாடல் இன்று மேலை நாடுகளின் அரசியலில் முக்கியம் பெற்று வருகிறது. மேலை நாடுகளின் சுற்றாடல் பற்றிய அக்கறை காட்டும் சக்திகள் வழமையான அரசியற் கட்சிகட்குள்ளன்றி வெளியிலேயே மிகுதியாகக் காணப்படுகின்றன. இதற்கான காரணங்கள் சுற்றாடல் பற்றிய அக்கறை பொருளாதார அபிவிருத்தியெனக் கருதப்படுவதற்கும் லாப நோக்கிற்கும் முரணாக அமைந்துள்ளமையே. சோஷலிஸ சமுதாய அமைப்புக்கள் இருந்ததெனக் கூறப்பட்ட நாடுகளிற் கூட இப் பிரச்சினை இருந்து வந்தமையும் விருத்தியடையும் நாடுகளெனப்படும் மூன்றாம் உலக நாடுகளிலும் இருக்கின்றமையும் மேற்கூறிய வாதத்திற்கு மறுப்பாகச் சிலரால் முன்வைக்கப்படுகின்றன. சுற்றாடல் பற்றிய தெளிவான பார்வை பல சோஷலிஸ நாடுகட்குள் விருத்தியடையாமையைக் காரணங்காட்டி, இக்குறைபாடு மார்க்ஸிய அணுகுமுறையின் குறைபாடென்று வாதிப்போரும் உள்ளனர். சுற்றாடல் பற்றிய பிரச்சினைக்கு சனத்தொகைப் பெருக்கம், தொழில் அபிவிருத்தி, மனித நுகர்வின் அதிகரிப்பு, வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், விரயமும் கழிவுப் பொருட்களின் பெருக்கமும், நவீன தொழில் நுட்பம் போன்ற பல்வேறு காரணிகள் பங்களிக்கின்றன. இவற்றுள் எவற்றினது பங்களிப்பும் மறுக்க இயலாதது. ஆயினும் மிக அடிப்படையானதும் சுற்றாடல் பற்றிய பிரச்சினையின் தீர்வுக்குத் தடையாக நிற்பதும் எது என அடையாளம் காண்பதன் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வு தேட முடியும்.


சனத்தொகைப் பெருக்கம் மனிதச்சுற்றாடலின் மீது பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது உண்மை. எனினும் இன்று மனிதச் சுற்றாடலைக் கடுமையாகப்பாதிக்கும் அம்சங்களை கவனத்திற் கொண்டால் பெரும்பாலானவை, சனத்தொகை குறைந்த, அபிவிருத்தியடைந்த சில நாடுகளின் மிகையான நுகர்வுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடையவை. தொழில் அபிவிருத்தி சுற்றாடலின் மாசுபடலுக்கு அளிக்கும் பங்கு முக்கியமானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயினும் குன்றாத பட்சத் தொழில் அபிவிருத்தியின் துணையின்றி உலகின் எந்த நாட்டிலும் மக்களது அடிப்படைத்தேவைகளை நிறைவேற்ற முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மனித நுகர்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இன்று பொருள் விரயம் கழிவுப் பொருட்களின் பெருக்கம் ஆகியவற்றுக்குக் காரணமாகவுள்ளது. மனித நுகர்வின் பரிமாணமும் தன்மையும் கண்டுள்ள மாற்றங்கள் அவசியமானவையா என்ற கேள்வி நம்முன் எழுகிறது. நவீன தொழில் நுட்பம் அவசியமா என்ற கேள்வி கூட எழுப்பப்படுகிறது. விஞ்ஞானம், தொழில் நுட்பம், பொருளாதாரம், முகாமை போன்ற வரையறைகட்குள் மட்டுமே விடைதேட முடியாத சுற்றுடற் பிரச்சனை ஒரு பாரிய அரசியற் பிரச்சனை என்பதை நாம் முதலில் அடையாளம் கண்டோமாயின் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பொருளாதாரம், முகாமை போன்ற அனைத்துமே அரசியலின் கூறுகளாகவே செயற்படுவதை நாம் அடையாளம் காணலாம். எனவே சுற்றுடல் பற்றிய பிரச்சனையின் தோற்றத்தையும் இன்றைக்காலத்தில் அதன் பயங்கரமான விரிவினதும் மூல காரணங்களை நோக்குவோம்.

வடகடல் கரையோரங்களில் தொங்குகின்ற எண்ணெய்க் கழும்புகளும் கழிவுகளும்.



www.tamilarangam.net

முதலாளித்துவத்தை [illegible] தொழிற்புரட்சியும் மனித சமுதாயத்தில் ஏற்படுத்திய மாறுதல்கள் அதற்கு முந்திய எந்த சமுதாய புரட்சி ஏற்படுத்திய மாறுதல்களையும் விடப் பெரியவை. உற்பத்தியின் பெருக்கமும் விஞ்ஞான - தொழில்நுட்பத் துறைகளில் ஏற்பட்ட விருத்திகளும் மனித இனத்தின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு வழிகோலியிருக்க வேண்டும். மாறாக, முதலாளித்துவம் மனிதரிடையிலான ஏற்றத்தாழ்வுகளை நீடித்து மிகக் கொடுமையான ஒரு சுரண்டல் முறையைத் தேசிய எல்லைகட்கு அப்பால் விஸ்தரித்தது. முதலாளித்துவத்தின் வருகையும் சாத்தியமாக்கிய சக்திகள் மனிதரின் உற்பத்தி சக்தியைப் பெருக்கியதோடு விஞ்ஞானத்தின் மூலமும் தொழில் நுட்பத்தின் மூலமும் சாதிக்கக் கூடியவற்றைப் பற்றிய பெரும் நம்பிக்கையை வளர்த்தன. ஆயினும் முதலாளித்துவ உலக நோக்கின் கீழ் விருத்தியடைந்த விஞ்

---

## வசந்தத்தை தேடி ....

இங்கு
இலையுதிர்காலம்
மரங்களுக்கு மட்டுமல்ல.
மனித மனங்களிற்குமே.
உறைவது பனி மட்டுமல்ல
எங்கள் ரத்தமுமே
இருப்பினும்
இவற்றை எதிர்த்து
மீண்டுமோர் வசந்தத்தை தேடி
மரங்கள் மட்டுமல்ல
மனித மனங்களுமே ....

— கணேசன்
கனடா.

www.tamilarangam.net

ஞானமும், தொழில்நுட்பமும், உற்பத்தியும் ஒரு முழுமையான, பலகோண, உலகுபரந்த பார்வையுடன் விருத்தியடையவில்லை. உற்பத்திப்பெருக்கம், சந்தைகளின் விருத்தி நுகர்வின் அதிகரிப்பு ஆகியவற்றுக்கு முதலாளித்துவ லாபநோக்கம் காரணமாகியது. நவீன தொழில் நுட்பத்தின் விளைவாகவும் தொழிலாளரின் உற்பத்தித்திறமையின் உயர்ச்சியினாலும் சாத்தியமான உற்பத்தி உயர்வு மனித குலத்தின் நலனுக்குப் பயன்படுவதற்கு மாறாக யுத்தத்திற்கும் மேலும் கொடுமையான சமுதாய ஏற்றத்தாழ்வுகட்கும் வறுமைக்கும் விரயத்திற்கும் காரணமாகியது. தொடர்ந்தும் முதலாளித்துவத்தின் நிலைப்புக்கு முதலாளித்துவ விஸ்தரிப்பு அவசியமானமையால், மிகையான நுகர்வு ஊக்கிவிக்கப்பட்டது. இன்றைய சுற்றாடலின் மாசுபடலுக்குக் கேந்திரமையமாக உள்ளவை மிகையான நுகர்வும், விரயமுமே.

முதலாளித்துவத்தின் விருத்தியையொட்டி முதலில் ஏற்பட்ட சுற்றாடற் பிரச்சனைகள், தொழிற்சாலைகளின் கழிவுப்பொருட்களால் உடனடியான சூழலில் ஏற்பட்ட அசுத்தமும் சேரிகளது பெருக்கத்தாலும் நகரங்களின் சனத்தொகை அதிகரிப்பாலும் ஏற்பட்ட சுகாதாரப் பிரச்சனைகளுமே எனலாம். இவற்றை முதலாளித்துவ சமுதாயத்தினது விருத்தியின் போக்கில் பல்வேறு அரசியற் போராட்டங்களின் விளைவாக ஓரளவு திருப்திகரமாகத் தீர்க்க முடிந்த போதும் பிரச்சனையின் அடிப்படையான விருத்தியின் போக்கைத் தவிர்க்க முடியவில்லை. தொழிற்சாலைகளும் பெரும் ஆலைகளும் படிப்படியாக நகரங்கட்கு வெளியே நகர்த்தப்பட்டதன் மூலமும் கழிவுப் பொருட்களைக் கையாள்வதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் மூலமும் நகரச்சுற்றாடலின் மாசுபடலும் நாட்டின் சுற்றாடற் பிரச்சனையும் சிறிதளவுக்குத் தணிக்கப்பட்டன. அதே சமயம் முதலாளித்துவம் தன் லாபத்தைப் பெருக்க அவசியமாக்கிய மிகையான நுகர்வும் அதன் விளைவான விரயமும் கழிவுப்பொருட்களின் பெருக்கத்திற்கு வழி கோலின. இன்றைய சுற்றாடற் பிரச்சனையின் பல கூறுகளில் குப்பைக்கூளத்தின் பெருக்கமும் சுகாதாரப்பிரச்சனையும் முக்கியமான ஒன்று. இதில் விரயத்தின் பங்கு கணிசமானது. மனிதரின் சோம்பேறித்தனத்தை வளர்க்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறையிலும் பொருட்களை நெடுங்காலம் பேணிப்பாதுகாக்கும் வழக்கத்தை முறித்துக் குறுகிய காலப் பாவனையின் பின் வீசியெறியும் முறையிலும் முதலாளித்துவம் துரிதமாகச் செயற்படுகிறது. பிளாஸ்ரிக் போத்தல்கள் பைகள் பெட்டிகள் கிண்ணங்கள் அலுமினியத் தகரங்கள் போன்றவற்றிலும் ஒரு முறை பாவித்து வீசியெறியும் பண்டங்களினதும் பெருக்கமும் மட்டுமன்றிக் காகிதம், கண்ணாடி போன்று ஒருகாலத்தில் கவனமாகச் சேமிக்கப்பட்டுத் திரும்பத்திரும்பப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் குப்பைமேடுகளாகக் குவிகின்றன. மூன்றாமுலக நாடுகளில் இது ஒரு சுகாதாரப்பிரச்சனையாகவும் உள்ளது. முதலாளித்துவத்தைப் பொறுத்தவரை மூலப்பொருட்களின் விரயமோ, சக்தியினதும் மனித உழைப்பினதும் விரயமோ லாபத்தை விட முக்கியமான பிரச்சனைகளல்ல. எனவே நுகர்வின் விருத்தி அதைவிட பன்மடங்கான வேகத்தில் குப்பை கூளங்களின் பெருக்கத்துக்கு வழிகோலுகிறது. இதைவிடத் தொழிற்சாலைகளிலிருந்து கொட்டப்படும் கழிவுப் பொருட்களின் நச்சுத்தன்மை நீரை அசுத்தமாக்குவதோடுமட்டுமன்றி அங்குவாழும் உயிரினங்களையும் அழித்துவருவதை நாம் அறிவோம் பெருகிவரும் கழிவுப்பொருட்களைக் கடலிற் கொட்டுவதன் பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வு சமீபகாலமாகவே அதிகரித்து வருகிறது. இதைவிட முதலாளித்துவநாடுகள் நச்சுத்தன்மை வாய்ந்த சில கழிவுப் பொருட்களை மூன்றாமுலக நாடுகளிற் கொட்டும் முயற்சிகளும் அண்மையில் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மனித சமுதாய நடைமுறை மூலமே மனித அறிவு விருத்தியடைகிறது. நடைமுறை என்றுமே பூரண அறிவு சார்ந்ததாயும் தவறுகட்கு அப்பாற்பட்டதாயும் இருந்ததில்லை. எனவே, விஞ்ஞானம், எந்த நிலையிலும் முழுமையான அறிவாகவும், தொழில் நுட்பம், தவறுகட்கு அப்பாற்பட்டதாகவும் இருக்க இடமில்லை அறியாமையினதும், தவறுகளினதும் விளைவுகளை அனுபவிப்பதன் மூலம் அறிவுவளர்ச்சியும் தவறுகளின் திருத்தமும் சாத்தியமாகின்றன. அந்த வகையில் விபத்துக்களையும் விபரீதங்களையும் முன்கூட்டியே தவிர்க்கக் கூடிய விருத்தி சாத்தியமில்லை. எனினும் வரலாறு தரும் பாடங்களை நாம் கணிப்பில் எடுக்காமற் குருட்டுத்தனமாகச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயற்படமுடியாது.

முற்காலத்தில் எரிபொருட்களின் நுகர்வு சிறிதாகவே இருந்தது. தொழில் வளர்ச்சியையொட்டி அந்நுகர்வு பெருகியது. அதன் உடனடியான விளைவுகள் புகையுடன் கூடிய தூசு காரணமான அசுத்தமும் ஆரோக்கியப் பிரச்சனைகளும் ஸ்மொக் (Smog) எனப்படும் புகைப்பனியுமாம். இவற்றின் கெடுதல்களுக்காய எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக நகரங்களின் மத்தியினின்று புகைபோக்கிகளையுடைய ஆலைகள் அகன்றன. வீடுகளைச் சூடேற்றும் எரிபொருட்களின் தரம் கட்டுப்படுத்தப்பட்டது. வீடுகளில் நிலக்கரிக்குப் பதிலாகப் புகையில்லாத திண்ம எரிபொருளும், வாயுஎரிபொருளும் மின்சாரமும் பயன்பட்டன. ஆயினும் மோட்டார்வாகனப் புகை துரிதமாகப் பெருகிவந்துள்ளது. இதன் விளைவுகளை முற்றாக அகற்ற முடியவில்லை. மோட்டார் வாகனங்களில் இருந்து புகை மிகையாக வராமலிருக்கும் விதமான கட்டுப்பாடுகள் இன்று நடைமுறையில் உள்ளன. ஆயினும் நச்சுவாயுவான காபனோரொட்சைடு ($CO$) நைதரசன் ஒட்சைட்டுகள் ($NO_x$) மற்றும் என்சின் இயக்கத்தை மேம்படுத்த பயனாகும் ஈயம் ஆகியனவற்றின் தீய விளைவுகள் பற்றிய நடவடிக்கைகள் இன்னமும் பூரண நடைமுறையில் இல்லை. எவ்வாறாயினும் நச்சுப்பொருட்களையும் ஆரோக்கியத்திற்குக் கேடான வாயுக்களையும் பிற கழிவுப்பொருட்களையும் அடையாளங்கண்ட அளவிற்கு எரிபொருட் தகனத்தின் முக்கிய விளைபொருளான காபனீரொட்சைடின் ($CO_2$) பாரிய விளைவுகளை அடையாளங்காண மிகுந்த காலமெடுத்தது. காபனீரொட்சைடு வளிமண்டலத்தில் உள்ள வாயுவாகையால் அதன் கெடுதலான விளைவு, வளிமண்டலத்தில் அதன் அளவின் அதிகரிப்பின் காரணமாக, உலகச் சுற்றாடல் மீது கடுமையான பாதிப்பாக அடையாளங்காணப்படும் வரை அலட்சியம் செய்யப் பட்டு வந்தது.

இன்று உலக விஞ்ஞானிகளிற் பெரும்பாலோரும் காலநிலை அளவியல் நிபுணர்கள் பலரும் காபனீரொட்சைடின் பெருக்கம் காரணமாக வளிமண்டலத்தின் வெப்பநிலை அதிகரித்து அதன் தொடர் விளைவாக துருவங்களில் பனி உருக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வும் கடல்மட்டம் சிலமீற்றர்கள் உயரவும் நேரும் என்பதோடு விவசாயம், உயிரினங்களின் பெருக்கம் போன்றவற்றில் எதிர்பாராதமாற்றங்கள் ஏற்படும் அபாயம் உண்டு என எச்சரித்துள்ளனர் இவர்களிற் கணிசமானோர், இவ்விஷயத்தில் ஏற்கனவே காலங்கடந்துவிட்டமையால் துரித நடவடிக்கை அவசியமென வலியுறுத்தி வருகின்றனர். ஆயினும் காபனீரொட்சைட்டின் பெருக்கத்திற்கு முக்கியமாக பங்களிக்கும் முன்னேறிய முதலாளித்து நாடுகளில் இதற்கான தீர்வு பற்றிய அணுகுமுறை மிகவும் கவலைக்குரியதாகவேயுள்ளது. காபனீரொட்சைட்டின் பெருக்கத்தைக் குறைக்க எரிபொருள் நுகர்வு குறைய வேண்டும். இதன் விளைவுகளிற் சில வற்றுக்கு முகங்கொடுக்க ஐரோப்பிய நாடுகள் ஓரளவு தயாராகவுள்ளன. அமெரிக்கா இதற்கு மாறாக நிற்கிறது. இந்த ஐரோப்பிய நாடுகளிற் கூட எரிபொருள் நுகர்வைக்குறைப்பதற்குத் துணையாக அணுசக்தியைப் பெருக்கும் முனைப்பு உள்ளது. தனியார் வாகனங்களின் தொகையைக் குறைப்பதும் மின்சாரம் எரிபொருள் ஆகிய வற்றின் பாவனையைச் சிக்கனப் படுத்துவதும் முதலாளித்துவ லாப நோக்கத்திற்கு முரணானவை இதன் காரணமாக சுற்றாடல் பற்றிய சட்டங்களை நிறைவேற்றுவதையும் நடைமுறைப்படுத்துவதையும் பன்னாட்டு நிறுவனங்கள் குறுக்கிட்டு தடை செய்வதையும் நாம் அறிவோம். இது ஒரு புறமிருக்க, காபனீரொட்சைட்டின் பெருக்கத்தின் விளைவாக Green House Effect எனப்படும் வெப்பநிலை அதிகரிப்பைக் குறைக்க முன்வைக்கப்படும் கருத்துக்கள் ஒரு புறம். ஒரு பிரச்சனையை தீர்க்க இன்னொரு பிரச்சனையை உருவாக்குவனவாயும், மறுபுறம் பிரச்சனையின் மையத்திலிருந்து கவனத்தை திருப்புவன வாகவுமே உள்ளன.

சேதன எரிபொருட்களான எண்ணெய், இயற்கைவாயு, கரி ஆகிய பொருட்களின் நுகர்வைக்குறைக்க அணுசக்தியை அதிகரிப்பது புதிய சுற்றாடற் பிரச்சனைகளைக்கிளப்புகிறது. இன்னமும் அணுசக்தியின் விளைவான கதிரியக்கத்தின் நீண்டகாலப்பாதிப்புகள் பற்றிப் போதியளவு அறிவு இல்லை என்பதே உண்மை. விஞ்ஞானத்தகவல்களும் ஆய்வுகளும் கூறுகூறாக நிறைய அறிவைச்சே

www.tamilarangam.net

கரித்துள்ள போதும் விஞ்ஞானம் முழுமையான பலகோண உலகப் பார்வையையுடையதாக வரும் வரை, இந்த அறிவு மிகவும் குறைபாடுடையதாகவே இருக்கும். காபனீரொட்சைடின் பெருக்கத்தின் விளைவை, விஞ்ஞானம் பல நூற்றாண்டுகட்குப் பின்னும் இன்னமும் முற்றாக அறிய வில்லை. கதிரியக்கம் பற்றிய அறியாமை அதைவிட மிகப் பயங்கரமானது. மறுபுறம், மூன்றாமுலக நாடுகளின் தொழில் விருத்தியும் அவற்றின் சமுதாய வளர்ச்சியும் நுகர்வை அதிகரிக்கும் வாய்ப்புப் பற்றியும் முதலாளித்துவ நாடுகளின் மத்தியில் கவலை தோன்றியுள்ளது. மூன்றாமுலக நாடுகளின் வாழ்க்கைத்தரம் விருத்தியடைந்த நாடுகளின் தரத்திற்கு உயர்வதன் விளைவுகளை முதலாளித்துவ எஜமானர்கள் அஞ்சுகின்றனர். எனவே சுற்றாடலின் மாசுபடல் பற்றிய போதனைகள் மூன்றாம் உலகை நோக்கி நடத்துகின்றனர். மூன்றாமுலகின் தொழில் நுட்பம் பின் தங்கியிருப்பதனாற் சுற்றாடலின் மாசுபடல் பற்றி அதிகம் செய்யமுடியாமலிருப்பது உண்மை. இது பற்றிய முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் பார்வையோ மிகவும் விநோதமானது. மூன்றாமுலகின் தொழில்நுட்பத்தை நவீனப்படுத்துவதன் மூலமும் அந்த நாடுகளில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி மூலமும் அங்கு நல்ல வாழ்க்கைத்தரத்தையும் சுத்தமான சுற்றாடலையும் பேணமுடியும். முதலாளித்துவம் ஒரு புறம் தன் மிகையான உற்பத்திப் பொருட்களைக் கொட்டிக்குவிக்க, முக்கியமாக ஆடம்பரப்பொருட்களையும் ஆயுதங்களையும் விற்க, மூன்றாமுலக நாடுகளிற் சந்தைகளைத் தேடுகிறது. மூன்றாமுலகின் உழைப்பையும் மூலவளங்களையும் மலிவாக வாங்கிப் பொருளாதாரத்தை சீர் குலைக்கிறது. நவீன தொழில் நுட்பத்தை விற்பதற்கு மிகையான விலை கோருவதன் மூலம் இந்த நாடுகளைக் கடனாளியாக்கிறது. மனிதரின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்யும் சமூக நல முயற்சிகளில் பணச்செலவைக் கட்டுப்படுத்தினாலே கடனுதவி தரமுடியும் என நிர்ப்பந்திக்கும் முதலாளித்துவ கடனுதவி நிறுவனங்கள், திறந்த சந்தை எனும் நிபந்தனை மூலம் முதலாளித்துவ உபரி உற்பத்தியை மூன்றாமுலகினுட் கொட்டிக் குவிக்க வழி செய்கின்றன. இவ்வாறு, ஏககாலத்தில் மூன்றாமுலகின் விரயத்தை ஊக்கி விக்கும் நடைமுறைகளிலும் மூன்றாமுலகின் அவசிய

www.tamilarangam.net

மான தேவைகள் நிறைவேற்ற முடியாதவாறு தடுக்கும் செயற்பாடுகளிலும் இறங்குவதன் மூலம் இச்சக்திகள் மூன்றாமுலகின் சுற்றாடல் நெருக்கடியை மேலும் மோசமாக்குகின்றன.

பெருவனங்களின் அழிவு காபனீரொட்சைட்டின் பெருக்கத்திற்கு சிறியதொரு பங்களிக்கிறதோடு சுற்றாடலைப் பல்வேறு வகைகளிலும் பாதிப்பது பற்றி இன்று கணிசமான கவனம் காட்டப்படுகிறது. இவ்வகையான அழிவில் முதலாளித்துவ நாடுகளின் நுகர்வுக்கான ஏற்றுமதிகளின் பங்கும் பன்னாட்டு நிறுவனங்களினது நடவடிக்கைகளினது பங்கும் முக்கியமானவை. மூன்றாமுலக நாடுகளில் வனங்களையும் விலங்குகள் உட்பட பிற வளங்களையும் பேணுமாறு வலியுறுத்தும் முதலாளித்து நாடுகள் அத்தகைய திட்டத்தை நடைமுறைப் படுத்தக் கூடிய அரசியற் மாற்றங்கட்குத் தடையாக நிற்பது பற்றி நாம் சிறிது அறிவோம். இது முதலாளித்துவத்தினாற் தீர்க்க முடியாத ஒரு அக முரண்பாடு. அதன் குறுகிய கால நலன்கள் மானிட இனத்தின் நீண்ட கால நலன்கட்குக் குறுக்கே நிற்கின்றன. இதிற் தன் அழிவையும் அடையாளங்காணும் முதலாளித்துவத்தால் இதற்கு மாறாக எதையும் செய்ய முடியாததோடு இதை மேலும் ஊக்குவிக்கும் முறையிலேயே செயற்பட முடிகிறது.

CFC எனப்படும் குளிரூட்டற் பதார்த்தங்களின் நுகர்வு காரணமாக ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள சிதைவு பற்றிய எச்சரிக்கைகளை முதலாளித்துவ அரசுகள் நீண்ட காலமாகவே அலட்சியம் செய்து வந்தன. இப்பிரச்சினை பற்றிய சமுதாய விழிப்புணர்வு அதிகமானதன் விளைவாக மேலைநாடுகளில் CFC உற்பத்தியைக் குறைக்கவும் அதன் பிரதியீடாக வேறு இரசாயனப் பொருட்களைப் பாவிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதற்கான தொழில் நுட்பம் மூன்றாமுலக நாடுகளில் இல்லை. மூன்றாமுலக நாடுகளில் குளிர்சாதனப் பெட்டிகள் போன்ற உபகரணங்களை உற்பத்தி செய்வதைக் குறைக்குமாறு அல்லது CFC


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திகு பிரதியான பதார்த்தங்களை உபயோகிக்குமாறு வலியுறுத்தும் முதலாளித்துவ வல்லரசுகள் அத்தொழில் நுட்பத்தை மலிவான விலையில் மூன்றாமுலகிற்கு வழங்க முடியாதவாறு முதலாளித்துவத்தின் லாப நோக்கம் தடையாக நிற்கிறதைச் சிலகாலம் முன்பு CFC பற்றி ஆலோசித்த உலக நாடுகளின் பிரதிநிதிகள் மாநாடு கண்டது.

சுற்றாடல் பற்றிய இன்றைய நெருக்கடியின் காரணங்களைக் கூறு போட்டால் மனிதரது வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றம், நுகர்வின் அதிகரிப்பு, சனத்தொகைப் பெருக்கம் என முன்கூறிய பல காரணங்களைக் காணலாம். விரயமும் அவசியமற்ற பொருட்களின் நுகர்வும் முதலாளித்துவத்தினால் மனித இனத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள சுமைகள். இவற்றிற்கு முதலாளித்துவம் தேடும் தீர்வுகள் விரயத்தையும் வீண் நுகர்வையும் அவற்றின் தோற்று வாயிலேயே தடுப்பதல்ல. இதற்கு மாறாக முதலாளித்துவம், கண்துடைப்பான முறையில் கழிவுக்காகிதம், பிளாஸ்றிக், கண்ணாடி போன்ற கழிவுகளை 'மீட்கும்' செயல்களில் அக்கறைகாட்டிக் கொண்டு விளம்பரம், விற்பனை ஆகியவற்றின் பெருக்கத்தையும் அதன் விளைவாக விரயத்தையும் குப்பையையும் மேலும் மேலும் அதிகரிக்கிறது.

ஒரு காலத்தில் முதலாளித்துவம் சிக்கனத்தை வலியுறுத்தியதுண்டு அது மூலதனத்தை திரட்ட வேண்டிய தொடக்க நிலை. இன்று முதலாளித்துவத்தின் நிலைப்பு விரயத்தை ஊக்குவிப்பதிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு முதலாளித்துவம் வளர்ந்து ஏகபோக முதலாளித்துவமாக ராட்சத வடிவங் கொண்டுள்ளது. தன்னைக் கட்டுப்படுத்தி உலக நலனைப் பேணும் தன்மையை லாபநோக்கம், சுய நலம், சுரண்டல் என்பவற்றை ஆதாரமாகக்கொண்ட ஒரு சமுதாய முறையினுள் நாம் தேடமுடியாது. மனிதச்சுற்றாடற் பிரச்சனைக்கான தீர்வு முதலாளித்துவ முறையின் முடிவுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. என்பதையே அண்மைக்கால அனுபவங்கள் வலியுறுத்துகின்றன.

—— எஸ். ஜே. எஸ்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருத்துப் பரப்பு

## இலங்கையில் நடைபெறுவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் தொடர்பான ஐ.நா வின் ஆய்வுக் குழுவின் அறிக்கை:-

— ஒக் 27 - நவ. 4. 1990

ஆங்கில மூலத்திலிருந்து தமிழில். ஜோவகன்

### முகவுரை:-

### குழுவின் நோக்கம்:-

இக்குழு இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் இலங்கையில் காணாமல் போனவர்கள் பற்றிய அறிக்கை ஒன்றைத் திரட்டு முகமாக அமைக்கப்பட்டது.

### பின்னணி:-

இலங்கை 1931 முதல் நேரடி சர்வசன வாக்குரிமை முறையைக் கொண்டிருந்தது. யு.என்.பி (ஐக்கிய தேசியக் கட்சி) 1977ல் எஸ்.எல்.எவ்.பி (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி) யிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றியது. யு.என்.பி 1983ல் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் தனது ஆட்சிக் காலத்தை நீட்டிக் கொண்டதுடன் அவ்வாண்டில் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலை ரத்துச் செய்தது. 1989ல் நடைபெற்ற பொதுத்தேர்தல் தேசிய வாதத் தீவிரவாதிகளான ஜே.வி.பியின் தேர்தல் பகிஷ்கரிப்புக் கோஷத்திற்கு மத்தியில் எழுந்த அச்சுறுத்தல் கொண்ட சூழ்நிலையில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1983 ன் நடுப்பகுதி முதல் மக்கள் காணாமல் போதல், சட்டத்திற்குப் புறம்பான மரணதண்டனைகள் என்பன அதிகரிப்பதாக அறிக்கைகள் வெளியாயின. அது மாத்திரமன்றி 1970 களின் பிற்பகுதியில் எதிர் இயக்கங்கள் சில தனித்தமிழ் ராச்சியம் அமைக்க ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டன. ஜூலை 87 முதல் சிங்களவரின் பெரும்பான்மையான தென்பகுதியில் ஆயுதம் தாங்கிய எதிர்ப்பு பரவலாகி 1989 ன் கடைசி அரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு பெருகி விட்டது.

அத்துடன் பயங்கரவாதத் தடுப்புச்சட்டமும் அவசரகால அதிகாரங்களும் பொலிசாருக்கும், ஆயுதப்படையினருக்கும் சந்தேகத்திற்கிடமானவர்களை எதுவித ஜனநாயக பொறுப்பும் இல்லாத முறையில் கைது செய்யவும் தடுத்துவைக்கவும் அதிகாரத்தை வழங்கியது.

## 3. கையாண்ட வழிமுறை:-

மனித உரிமைகள் பற்றித் தற்போதுள்ள நிலைபற்றிய பரந்தளவிலான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, நாம் பாராளுமன்றத்தின் பல் வேறுபட்ட அங்கத்தவர்களையும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரையும், இராணுவத்தளபதியையும், பல மனித உரிமை தாபனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்தோம்.

நாம் சுமார் 250 காணமற் போனோரின் உறவினர்களையும் சுமார் 50 இருப்பங்களையும் சந்தித்துப் பேட்டிகண்டோம். காணமற் போனோர் பற்றிக் குறைந்தது 1500 அளவு எழுத்திலான ஆவணங்களையும் பெற்றுக் கொண்டோம். இவ்வறிக்கையின் முடிவுகளும் ஆய்வுகளும் ஒப்பீட்டு முறையில் சரிபார்க்கப்பட்ட வாக்குமூலங்களை அல்லது எழுத்திலான அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டவையாகும். பெயர்களும் முகவரிகளும் சம்பந்தப்பட்டவர்களினதும் அவர்களின் உறவினர்களினதும் பாதுகாப்புக் கருதிக் கைவிடப்பட்டுள்ளன.

## 4. கண்டறிந்தவைகள்:-

எடுத்துச் செல்லப்பட்டவர்களின் உடல்கள் அனேகமாக எரியூட்டப்பட்ட நிலையில் அல்லது சிதைவுற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்டதாக அறிக்கைகள் பெறப்பட்டன. ஏனையோர் கைது செய்யப்பட்டு விடுதலையானதின் பின் காணமற் போயுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் மக்கள் எதுவித ஆதாரமுமின்றி காணாமல் போயுள்ளனர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தகவல்களைத் தேடும் குடும்ப
த்தவர்கள் பொலிசாரிடமிரு
ந்து எதுவித தகவலுமின்றி
இன்னமும் காத்துக் கொண்
டிருக்கின்றனர்.

எம்மால் பெறப்
பட்ட பல்வேறு மதிப்பீடுகளி
ன்படி 1987 லிருந்து இதுவ
ரை தென்னிலங்கையில் குறைந்தது 60,000
பேர்வரையில் காணமற் போயு
ள்ளனர் எனக்கொள்ள வேண்டி
யுள்ளது. இது சனத்தொகையில்
ஒவ்வொரு 250 பேருக்கு ஒரு
வர் எனக் கொள்ளலாம். இலங்
கையின் வடக்கும் கிழக்கும் சே
ர்த்துக்கொள்ளப் படவில்லை. நா
ம் இலங்கையில் தங்கியிருந்த
நாட்களில் காணமற் போதல்
தொடர்ந்து நடைபெறுவதாகக்
கேள்விப்பட்டோம். உதாரண
த்திற்கு கண்டிப் பிரதேசத்தில்
1990 லிருந்து, வாரத்திற்கு 20
க்கும் 50 க்கும் இடைப்பட்ட தொ
கையினர் காணமற் போயினர்.

பொலிசாரினது அல்லது
ஆயுதப்படைகளின் நேரடி அ
ல்லது மறைமுக ஈடுபாடு இருந்
ததாக அனேக அறிக்கைகள் குற்ற
ம் சாட்டுகின்றன. சில சமயங்
களில் பொலிஸ் அல்லது ஆயுத
ப் படையினரின் சார்பில் செய்யப்

ப்படும் விழிப்புக்குழுக்களால் இ
ரவு நேரங்களில் உறவினர்கள்
கடத்திச் செல்லப் பட்டுள்ளதாக
த் தோன்றுகிறது. சில சமயங்களி
ல் பொலிசார் சீருடையில் அல்லா
து சாதாரண உடையில் வந்துள்
ளார். எவ்விதத்திலாயினும் உறவி
னர்களை கடத்திச் சென்றோர் பொ
லிசார் என இனங்காணப் பட்டு
ள்ளனர். பயங்கரவாதத் தடை
ச் சட்டமும் அவசரகால அதிகா
ர விதிகளும் துஷ்பிரயோகிக்க
ப் பட்டுள்ளமை தென்படுகிறது.

நாம் பாதுகாப்பு ராஜாங்
க அமைச்சரையும் இராணுவத்தின்
தலைவரையும் கொலைகளுக்கும் காண
மற் போவதற்கும் விளக்கம் கேட்
ட போது இராணுவத்தலைவர், அதற்கு
இராணுவப்படையைக் கைவிட்டுச்
சென்றவர்களும் இராணுவத்திலிருந்து
விலக்கப்பட்டவர்களுமே சில கொ
லைகளுக்குக் காரணமாயிருந்தனர் எ
னக் குறிப்பிட்டார். யாழ்ப்பாணப்
பகுதியிலும், ஜே.வி.பியின் கிளர்ச்சி
க்காலத்திலும் படையினரின் சிலம்
த மீறிய செயல்கள் காரணமே; எ
ன்பதை பாதுகாப்பு ராஜாங்க
அமைச்சர் ஏற்றுக் கொண்டார். எ
ன்றும் ஓர் பொலிஸ் விசாரணை
இது தொடர்பாக நடைபெறுவதாக
க் கூறினர்.

www.tamilarangam.net

கொடூரங்கள் பற்றிய விபரங்கள் எம்மைத் திகைப்படையச் செய்தன. உதாரணத்திற்கு ஒரு வங்கியைக் கொள்ளையடித்ததெனக் கருதப்பட்ட ஆறு இளைஞர்கள் ஒரு வங்கியின் முன்னால் வைத்துப் பகிரங்கமாக பொலீசாரால் சுடப்பட்டு தலைகள் கொய்யப்பட்டு உடல்கள் சிதைக்கப்பட்டார்கள் என விவரித்தனர். அவர்களில் இருவர் வங்கி கொள்ளையிடப்பட்டபோது பொலீசாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். எனவே அவர்கள் கொள்ளையில் சம்பந்தப்பட்டிருக்க சாத்தியமெதுவும் இல்லை. பிறிதோர் சம்பவத்தில், ஒரு தாய்; தனது மகனை அதிகாலையில் கடத்திச் சென்றதாகவும் இரண்டு தினங்களின் பின் அவனது தலையை வீட்டிற்கு வெளியே விட்டு விட்டுச் சென்றிருந்ததாகவும் கூறினார்.

இவற்றை விட பல தாபனங்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப் பட்டிருப்பதைக் கவனித்தோம். உதாரணத்திற்கு சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழிற்சங்கங்கள் செயற்பட முடியாது. அவர்கள் வேறு இடங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவும் முடியாத வகையில் மிரட்டல்களுக்காளாக்கப்பட்டுள்ளார்கள். H.N. ரஞ்சித் என்பவர் சில ஆபத்தான இயந்திரங்கள் பற்றி முறைப்பாடிட்டதின் பின் காணமற் போயுள்ளார். காணமற் போனோர் சார்பில் ஆட்கொணர்வு மனு சமர்பிக்கும் சட்டவறிஞர்கள் மிரட்டப்பட்டுள்ளார்கள். சில சட்டவறிஞர்கள் தமே காணமற் போயுள்ளனர். பத்திரிகை நிருபர்கள் கூடிய கவனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளனர். இவர்களிற் சிலர் மனித உரிமைகள் நிலைமை தொடர்பாக பிரசுரித்தமையால் காணமற் போயுள்ளனர். ஓர் வகை நாடகத்தின் இணையாசிரியர்களான ரிச்சாட் டி சொய்சாவின் கொலையும் லக்ஸ்மன் பெரேரா என்ற கல்கிசைய நகரசபை அங்கத்தவர் காணமற் போனமையும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இந்நாடகம் கொழும்பு வாழ் மத்தியவர்க்கத்தினரிடையில் நாட்டின் நிலைமை பற்றிய விழிப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டமையே.

## முடிவுரை

1 இராணுவத்தினரும், அதிகாரிகளும் கொலைகள் காணமற் போதல் தொடர்பாக தமது பொறுப்பை தட்டிக்கழித்தாலும் நிறுத்துப் பார்க்குமிடத்து அரசு குற்றவாளியாகக் காணப்படுகிறது இங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேளை அரசு சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றும் தனது கடமையில் தவறியிருக்கலாம் அல்லது பாதுகாப்பு படைகளின் நடவடிக்கைகளைக் கண்டும் காணாதது போலிருந்திருக்கலாம் எனக் கொள்ளலாம்

2. ஜே.வி.பியின் பிரச்சனைகள் 1989 டிசம்பர் மாதத்துடன் தீர்க்கப்பட்டதென அரசு கூறிக் கொள்கிறது. மேலும் அரசு தற்போதைய வன்முறை தொடர்பான பிரச்சனைகள் யாவும் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மாத்திரம் தான் எனக் கூறிக் கொள்கிறது. அரசின் கூற்றுப்படி தென்பகுதியில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது. ஆனால் பல கொலைகளும் காணாமற் போதல் சம்பவங்களும் தொடர்ந்தும் நடை பெறுகின்றன என்பது கண்கூடு.

3. தூதுக் குழுவைப் பொறுத்தவரையில் அனேகமக்கள் அச்சமும் பயங்கரம் நிலவும் ஒரு சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாகப் புலனாகிறது. இந் நிலை தொடருமானால் எதிர்காலத்தில் எதிர் நடவடிக்கைகளும் இரத்தக் களரியும் ஏற்படலாம் என்ற





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அச்சம் எமக்கு ஏற்படுகிறது.

4. பொருளாதாரம் சீர்குலையும் என்ற அச்சம் காரணமாக அச்சுறுத்தல்களும் அதற்காதாரமான வன்முறை தொடரும் சூழ்நிலையும் ஒடுக்கு முறைகளும் மேலும் தாபமிடப்படுகின்றன.

5. மனித உரிமைக் குழுக்களின் வளர்ச்சி எதை எடுத்துக்காட்டுகிறது என்றால் நாட்டின் பிரச்சனைகளுக்கு சமாதானமும் ஜனநாயக அடிப்படையிலானதுமான தீர்வுக்கான விருப்பமுமேயாகும்.

6. ஒரு நிலையான தீர்வுக்கு பலதரப்பட்ட சமூகங்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கையும் ஒற்றுமையும் ஊக்குவிக்கப்படல் வேண்டும். சாதி, வர்க்க, இன மத அல்லது மொழியடிப்படையிலான எவ்வித பாகுபாடும் காட்டப்படக்கூடாது. சகல சமூகத்தினரதும் ஜனநாயக, மனித குடியுரிமைகள் உண்மையாக நடை முறையில் பேணப்படுவதை நாட்டின் அரசும், சட்ட முறைமைகளும், சட்டத்தையும் ஒழுங்கையும் காக்கும் சக்திகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## சிபாரிசுகள்

1. கடைசியாக இலங்கைக்குக் கிடைத்த வெளிநாட்டு உதவித் தொகையைப் பார்க்குமிடத்து அரசாங்கத்தின் திட்டங்களையும் கொள்கைகளையும் முழு உலகமுமே அங்கீகரிக்கிறது என ஜனாதிபதி பிரேமதாசா

www.tamilarangam.net

றுகிறார். (ஆக. 29 திங்கள்
190 சிறிலங்கா டெயிலி நியூஸ்
த்திரிகை) இலங்கைக்கான
உதவிகள் அந்நாட்டின் மனி
உரிமைகளுடன் இணைக்கப்பட
வேண்டுமென்ற ஐரோப்பிய
மந்திரிகள் சபையின் 1990
த் பிரகடனத்தை நாம் வர
வற்கும் அதேநேரத்தில் மேற்
கொண்டு உதவிகளுக்கான சிபா
ரிசுகள் செய்யப்படுவதற்குமுன்
மனித உரிமை சட்டம் ஒழு
ங்கு தொடர்பான வளர்ச்சி பற்றி
ய கணிப்பீடு செய்யும் ஒரு மு
றைமையை ஏற்படுத்த வேண்
டும் என நாம் கருதுகிறோம்.

2. ஐக்கிய நாடுகள் தாபனத்
தின் காணாமற்போனோர் தொடர்
பானதும் மனித உரிமைகள்
பற்றியதுமான உபகொமிட்
டி 1991 பெப்ரவரியில் வரு
கைதரவிருப்பதை பாதுகாப்பு
அமைச்சர் அங்கீகரித்துள்ளார்.
இவ்வருகையை நாம் ஆதரி
க்கிறோம்.

3. ஒரு சுதந்திரமுள்ள குழுவினால்
காணாமற்போனோர் தொடர்பான
புலன் ஆய்வு ஒன்று நடத்தப்பட
வேண்டும். என்று விரும்பும் அதே
வேளையில் இலங்கைச் சட்டத்த
ரணிகள் சங்கத்தின் "சுதந்திரமா
ன விசாரணைக் குழு ஒன்று நிய
மிக்கப்பட வேண்டும்." என்ற
தீர்மானத்தையும் ஆதரிக்கிறோம்.

4. சர்வதேச செஞ்சிலுவைச்
சங்கத்திற்கும் அரசாங்கத்திற்கு
மிடையில் கூடிய ஒத்துழைப்
பு ஏற்படுத்த தூண்டுதல் செய்ய
விரும்பு கிறோம்.

CHRSTINE ODDY
ஐரோப்பிய பாராளுமன்
றப் பிரதிநிதி.

ALEX SMITH
ஐரோப்பிய பாராளுமன்
றப் பிரதிநிதி

BERNARD DEWITT
பெல்ஜியநாட்டு வழக்கறிஞர்

CORJAN SCHOORL
நெதர்லாந்து நாட்டு வழக்
கறிஞர்.

நவம்பர். 1990



'இலங்கையில் அரசும் புலிகளும் யுத்த நிறுத்த
மாம்'
'காதோட வைச்சிரு இலண்டனில் பழைய
தளபதிகள் பேசுகினமாம்'
பின்ன் பிறகும் சண்டைக்கு ஒரு தயாரிப்போ?

www.tamilarangam.net

# — புதிய பூமி —

நெடுந்தொலைவிழந்த மனிதர்கள் அலைந்து அலைமிக வளர்ந்த கடல்களிலே
முடிகளை அளந்த மனிதர்கள் நடந்த சுவடுகள் பதிந்த மலைகளிலே
சுடுவெயில் எரிந்து பனிமழை நனைந்து மனிதர்கள் பார்த்த வெளிகளிலே
தடை பலகடந்த படைபல நடந்த புழுதியில் அமிழ்ந்த உலகமிது.
முடிசில நிமிர்ந்து அரசுகள் எழுந்து முடிபல கவிழ்ந்த நிகழ்வுகளில்
வெடிமிக விழுந்து நகர்பல சிதைந்து குடிகளும் நலிந்த கொடுமைகளில்
உடல்பல சிதைந்து உயிர்பல அழிந்த சமர்பல நிகழ்ந்த பொழுதுகளில்
கொடுமையில் விளைந்த கொலைகளில் வழிந்த குருதியில் நனைந்த தரணியிது.
அறிவினில் மயங்கி மதவெறிமிகுந்து குலவழி பிரிந்த பகைமைகளால்
நிறவெறி புகுந்து இனவெறி வளர்ந்து மொழிவழி பிளந்த மனிதரிடை
அறமென மொழிந்து மறமென நினைந்த கொலைவெறிமிகுந்த செயல்களினால்
உறவுகள் சிதைந்து உணர்வுகள் மழுங்கி இழிவினில் உழன்ற உலகமிதில்
வலியவரெழுந்து வலுவிலர் நலிந்து அடிமைகள் அமைந்த இழிமுறையில்
மெலியவர் பொழிந்த வியர்வையில் வளர்ந்த நலமிக அடைந்த மனிதர்தமை
மெலியவர் இணைந்து கனவுடன் நிமிர்ந்து எதிர்கொள முனைந்த கிளர்வுகளில்
பல முறை விழுந்து மறுபடி எழுந்து கிளர்வுகள் தொடர்ந்த புதுமைபல,
விதிமுறை மிகுந்து விடுதலை இழந்து உரிமைகள் அழிந்த பொழுதுகளில்
கொதிபட எழுந்த மனிதர்கள் நிறைந்த நெடுமதிலுயர்ந்த சிறைகளிடை
வதைபல அடைந்து துயர்பல சுமந்து உடல்மிக நலிந்த கொடுமைகளில்
மிதிபட நெகிழ்ந்து சிரமெடு நிமிர்ந்த மனிதர்கள் நடந்த சுவடுகளில்.
மனிதரினுழைப்பை மனிதர்களுறிஞ்சு மரபினை முறிக்கு நெறியுடன்
மனிதரை ஒறுக்கி மனிதர்கள் மிதிக்கு முறைகளை முடிக்கும் சமர்களாலும்.
தனியொரு நபர்க்கும் உரிமைகள் மறுக்கும் நிலைகள் ஒழிந்த புதுவுலகில்
பனிநெடுமலைக்கும் புயல்கடல் கனற்கும் மனிதரைப் பிரிக்கும் வலிமைகளும்.

— சிவா

www.tamilarangam.net

# இலங்கைக்கான ஒரு நாள்
# 'SRILANKA DAG'

மத்திய நெதர்லாந்திலுள்ள Driebergen எனுமிடத்தில் இலங்கைக்கான அமைப்பினரால் (Srilanka werk groep) நால் 24,11.90 ல் நடத்தப்பட்டது. நெதர்லாந்துக் காரர்கள் பலரும் இலங்கையர் பலரும் இந் நிகழ்ச்சி அரங்கில் காணப்பட்டனர். நிகழ்ச்சியின் பிரதான நோக்கம் 'மௌனத்தை உடையுங்கள், வன்முறைக்கெதிராகப் போராடுங்கள் (Breake the silence fihgt against violence) எனும் அடிப்படையிலே அமைந்திருந்தது.

வந்திருந்த அனைவரும் நிகழ்ச்சிகளை மிக உன்னிப்பாக அவதானித்ததும், கலந்து கொண்டதும், இலங்கையின் அண்மைக்கால சம்பவங்களோடு நிகழ்ச்சி பிணைக்கப்பட்டிருந்ததே காரணமாகும். அதிலும் இலங்கை அகதிகளுடனான நேரடித் தொடர்புடைய நிறுவனங்களிருந்து பலரும் கலந்து கொண்டதும் கருத்துக்கள் வழங்கியதும் மிக முக்கியமானதாகும். அரங்கில் ரஜனி திரணகம, ரிச்சாட் டி சொய்சா, விஜயகுமாரதுங்க ஆகியோரின் படங்களும் ஞாபகார்த்தக் குறிப்புக்களும் தொங்கவிடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சிகளில் இரண்டு முக்கியமான பேச்சாளர்கள் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கினார்கள். ஒருவர் Morgan School இவர் பிரபல நெதர்லாந்து வழக்கறிஞரும் அண்மையில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான செய்திகளைத் திரட்டுவதற்காக இலங்கைக்கு போய்த்திரும்பிய சர்வதேச கமிசன் குழுவின் அங்கத்தவர் ஒருவருமாவார். இவருடன் பெல்ஜிய வழக்கறிஞர் ஒருவர் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இங்கிலாந்தின் உறுப்பினர்கள் இருவரும் சென்று வந்தனர். இவர்கள் வெளியிட்ட அறிக்கையின் தமிழாக்கம் இவ்விதழில் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களான காணமற் போதல், கொல்லப்படுதல் சிறைபிடிதல் தொடர்வதாகவும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு வழங்கும் அபிவிருத்தி நிதியினை இம்மனித உரிமை மீறல்கள் பரிசீலித்தே வழங்க வேண்டும். அதுவரை அதனை நிறுத்த வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்த முக்கிய பேச்சாளர் திருமதி மனோராணி சரவணமுத்து. இவர் பிரபல (Journalist) செய்தியாளரும் தொலைக்காட்சி செய்தி அறிவிப்பாளரும் தேசிய செய்தி நிறுவனங்களுக்கும் சர்வதேசிய செய்தி நிறுவனங்களுக்கும் செய்திகளை அனுப்பும் ஒருமான, இலங்கையில் கடத்திச் சென்று கொல்லப்பட்ட 'ரிச்சட் டி சொய்சா' வின் தாயார்.

'இலங்கையில் ஏனைய பல தாய்மார்களை விட ஒரு விதத்தில் அதிஷ்ட வசமான தாய்தான் எனவும் ஏனென் தனது மகனின் இறந்த உடலையாவது திரும்பப் பெற்று மரணச்சடங்கை நடத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது எனவும், எத்தனையோ தாய்மார்கள் தாங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என தெரியாத நிலையில் உள்ளனர்' என்றும் கூறியதுடன் 'தனது மகன் நித்திரையில் இருந்த போது வீட்டுக்கு வந்த பொலிசாரால் எவ்வாறு கூட்டிச் செல்லப்பட்டார் என்றும், பின்னர் கடற்கரையில் மகனின் சடலத்தைக் கண்டெடுத்ததாகவும்' கூறியதுடன் 'தனது மகனைக் கூட்டிச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரை தன்னால் அடையாளம் காட்ட முடியும்' என்றும் குறிப்பிட்டார்.

'மேலும் இலங்கையிலுள்ள தாய்மார்களுக்கு உதவவும், நாளாந்தம் காணாமல் போவது பற்றியும் சித்திரவதைகள் பற்றியும் இதற்கு எதிராக போராடுமாறும் சர்வதேசங்களின் உதவியை நாடினார்.

| |
|---|
| * மௌனத்தை உடையுங்கள், வன்முறைக்கெதிராக போராடுங்கள். * |

இலங்கை சம்பந்தமான படங்கள் இலவசமான வரலாற்று விபரணம் ஒன்றும் செய்யப்பட்டது.

பின்னர் இலங்கைக் கலாச்சார அமைப்பினரால் (S.C.V) நகைச்சுவை கலந்த ஓரங்க நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது.

இருதியாகதீபம் உணவகத்தின் சுவையான உணவுடன் விழா நிறைவு பெற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்